
# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 4 இதழ் : 3 மார்ச் 2025



# தலைமுறைகளை

## கடந்து வாழ்வில் சவால்களை எதிர்கொள்ள
## என்றும் உங்களுடன்

**எங்களின் வெற்றிப்பயணத்தில் மேலும் ஓர் நம்பிக்கையான ஆண்டுகள் 06.01.1947 முதல்**

**38**
**கிளைகள்**

**10**
**லட்சத்திற்கும் மேலான வாடிக்கையாளர்கள்**




**8667003356**


SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI

# ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

தலைமுறைகள் தாண்டும் வெற்றிப் பாதையில் உங்கள் உற்ற நண்பனாய், ஒரு சகாப்தத்தின் நம்பிக்கையோடு, மக்கள் மனதில் மகிழ்ச்சியைப் பரவ செய்யும் ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் நிறுவனத்தின் 78வது ஆண்டு விழா, வைர விழா கண்ட எங்கள் நிறுவனத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கை, நிறைவான திட்டங்களினால் உங்கள் வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுமே எங்கள் வெற்றி என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். தோளோடு தோள் நிற்கும் உற்ற நண்பனாய், காலத்திற்கேற்ற மாற்றங்களோடும் தொழில்நுட்ப முன்னேற்றங்களோடும், நம்முடைய எதிர்கால இலக்குகளான, ஒன்றிணைந்த வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தை நோக்கி எங்கள் நிறுவனம் பெருமையுடன் நடைபோடுகிறது. எங்களுடைய அனைத்து தரப்பு வாடிக்கையாளர்களுக்கும் தரமான, நிலையான, தொடர்ச்சியான பங்களிப்பை வழங்குவதற்கு மேலும் உறுதியோடு செயல்படுகின்றோம். உங்களின் நம்பிக்கையும் ஆதரவுமே எங்கள் செயல்பாடுகளுக்கான ஆதாரமாகிறது. அதற்காக இன்னும் அதிக அர்ப்பணிப்போடு செயல்படுகிறோம். சரித்திரமாகப்போகும் இந்த இமாலய சாதனையை சாத்தியப்படுத்த, உறுதியோடு தொடர்ந்து உழைக்கும் எங்கள் ஊழியர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் மனதார பகிர்கின்றோம். ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட் நிறுவனத்தின் வெற்றிப் பயணத்தில் உடன் பயணிக்கும் உங்கள் அனைவரின் பேராதரவோடு நூற்றாண்டு இலக்குகளை நோக்கி இன்னொரு அடி எடுத்து வைக்கின்றோம். சிகரம் தொடும் சவால்களிலும், வெற்றிக்கான படிகளிலும் ஒன்றிணைந்து நடைபோடுவோம்! வாருங்கள்!

## நன்றி! நன்றி! நன்றி!

| பதிவு அலுவலகம் | நிர்வாக அலுவலகம் | மத்திய அலுவலகம் |
|---|---|---|
| திருநெல்வேலி - 627 006 | பள்ளத்தூர் - 630 107 | 219, அண்ணாசாலை, சென்னை - 600 002 |
| போன்: 0462 2333474 | போன்: 04565 283477, 8667003356 | போன்: 044 28523386 |




GET IT ON Google Play

# வணக்கம் வாசகர்களே...

**இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்**

**Naam Nagarathar Mobile App**

**இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...**

**இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின் உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...**



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

மார்ச் 2025

மலர் : 4 இதழ் : 3

இலவச வெளியீடு

**பதிப்பாசியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---



கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.



PM
SWITCH TO THE FUTURE
PALLATHUR MOTORS LLP
PETROL
RIDER LIFE
SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !
PETROL STATION
ELECTRIC
RIDER LIFE
SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!
ELECTRIFY YOUR
JOURNEY NOW
Go far and wide with just
a single charge
LECTRIX
Book Your
TEST DR!VE
Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

**நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நம் மின்னிதழ் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.**

**இன்னும் சில தினங்களில் தெய்வத் திருமணங்கள் நடைபெற்ற பங்குனி உத்திர நன்னாள் வரவிருக்கிறது. இந்நாளில் இறைவனின் திருமணத்தைக் கண்டு வணங்குவது, திருமணம் நடைபெறாதவர்களுக்கு வெகுவிரைவில் திருமண கைகூடும் என்பது நம்பிக்கை. இந் நன்னாளில் நம் நகரத்தார் புள்ளிகள் பெருக எல்லாம் வல்ல இறை அருளை வேண்டுவோம்.**

**வழக்கம் போல் தங்கள் அனைவரது வாசிப்பை கவரும் வகையில் இந்த இதழை தேர்ந்தெடுக்கப்பட்ட பல ஆக்கங்களுடன் வெளியிடுகின்றோம்.**

**வாசகர்களாகிய உங்களில் பல சிறந்த படைப்பாளிகள் உள்ளனர். உங்களின் படைப்பாற்றலை உலகுக்கு தெரிவிக்க ஒரு அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதில் நாம் நகரத்தார் மின்னிதழ் பெருமை கொள்கிறது. உங்களை படைப்புக்களை எங்களுக்கு மின்னஞ்சல் வாயிலாக எழுதி அனுப்புங்கள். தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகள் வரும் இதழ்களில் வெளியிடப்படும்.**

**நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.**

வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக மின்னிதழின் MOBILE APP வெளியிடப்பட்டு தற்போது உலகளாவிய பயன்பாட்டில் உள்ளது.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்

பதிப்பாசிரியர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- வெற்றியாளர் சந்தித்த தோல்விகளை யார் அறிவார்?
  –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. ........................ 10

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் ........................ 18

**ஆன்மீகம்**

- தெய்வத் திருமணங்கள் நிகழ்ந்த பங்குனி உத்திரம்...! ........................ 25

**கவிச்சோலை**

- பெண் என்பவள்... – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர் ........................ 32
- தூக்கம் கெடு – கவிஞர் எம்.சோலை காரைக்குடி ........................ 41
- உன் வாழ்க்கை உன் கையில் – தஞ்சை பழ வள்ளியப்பன். மதுரை ........................ 86

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி ........................ 33

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA ........................ 36

**சமையல்**

- கிட்சன் டிப்ஸ்... ........................ 37

**பக்தித் தொடர்**

- சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் – ச.முத்துலெட்சுமி திருநெல்வேலி ........................ 42

**சமூகம்**

- நம் நகரத்தார் – குமரன் பதிப்பகம், தேவகோட்டை திரு.எஸ்.வைரவன் ........................ 51

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்... க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ........................ 66

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி.. மகர. லக்னம்..! –ஜோதிடர் எல்லி ........................ 79

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி)லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி)லிட்.

VALATHI
Since 2005

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ.1,00,000/- முதல்**
**ரூ.25,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பல்லாண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064,80
3569950,7968005.

துவக்கம்
2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C–145D, NVV கேஸ்டில் முதல் தளம்
6வது கிராஸ் கிழக்கு, தில்லைநகர்.
திருச்சிராப்பள்ளி 620 018
தொடர்புக்கு: 94878 85143, 90809 78057,
0431–2760064,

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி, (ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

# வெற்றியாளர் சந்தித்த தோல்விகளை யார் அறிவார்?



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.


வாழ்க்கையில் பலரது வெற்றிகளைக்கண்டு நாம் வியந்து நிற்பதுண்டு! சிலரது வெற்றிகளை புத்தகத்திலே படித்துவிட்டு மலைத்துப் போனதும் உண்டு.

நாம் எல்லோருமே அந்த குறிப்பிட்ட நபர் பெற்ற வெற்றியை மட்டுமே காண்கிறோம். அது குறித்து மட்டுமே விவாதிக்கிறோம். ஆனால் அந்த வெற்றியை அவர் பெறுவதற்கு முன்பு, அவர் சந்தித்த சோதனை களையோ அல்லது தோல்விகளையோ நாம் நமது எண்ணத்தில் கொள்வதில்லை.



பொதுவாக ஒரு மனிதன் வெற்றி பெற்று விட்டாலோ அல்லது சாதனை படைத்து விட்டாலோ,அந்த மனிதரை தலையில் தூக்கி வைத்து கொண்டாடுகிறோம். அந்த மனிதர் அதற்கு முன்பு எத்தனை தோல்விகளைச் சந்தித்தார் என்பது பற்றி நாம் அறிவதில்லை. அவர் பெற்ற வெற்றி ஏதோ ஒரு நாளில் வந்த வெற்றி அல்ல என்பதைக்கூட நாம் உணர மறுக்கிறோம். அந்த மனிதர்,வெற்றி பெறுவதற்கு முன்பு,அவர் பெற்ற தோல்விகளை நாம் அறிந்திருப்போமானால், அது பற்றி நாம் அவரை விமர்சனம் செய்திருப்போமே தவிர, அவரை ஒரு நாளும் தட்டிக்கொடுத்து நம்பிக்கை அளித்திருக்க மாட்டோம்.

ஏன் என்றால் வெற்றி ஒன்றை மட்டுமே பார்த்து பழக்கப்பட்டுப் போனோம். ஒருவன் வெற்றிபெற எத்தனை நாள் உழைத்தான்? எத்தனை தியாகங்களைச் செய்தான்? எத்தனை தோல்விகளைச் சந்தித்தான்? எத்தனை இடையூறுகளை அவன் எதிர் கொண்டான்? என்று ஒரு நாளும் நாம் நினைத்துப் பார்ப்பதில்லை



ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவின் தலைசிறந்த அதிபர்களில் ஒருவராக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறார். அமெரிக்க மக்கள் அவரை ஒரு சிறந்த அதிபராக ஏற்றுக் கொள்வதற்கு காரணம்.

அமெரிக்காவில் நடைபெற்ற உள்நாட்டுப் போரில், உடைந்த நாட்டை மீண்டும் இணைத்தார் என்ற காரணத்தாலும் தன் இன மக்களின் அடிமை முறையை முற்றோடு அழித்து ஒழித்தார் என்ற ஆளுமைக்காகவும், சரிந்து போய்க்கிடந்த அமெரிக்காவின் பொருளாதாரத்தை சீர்திருத்திய ஆற்றலுக்காகவும் தான் அவரை அமெரிக்க மக்கள் அன்று கொண்டாடினார்கள். அவர் இறந்து பல்லாண்டுகள் ஆனபின்பும் கூட ஆபிரகாம் லிங்கனைப் போற்றுவதற்கு இவைகள் தான் காரணம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.



ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க அதிபராகத் தேர்தலில் வெற்றியடைந்தாலும், அவர் கடந்து வந்த பாதையில் பல்வேறு தோல்விகளைச் சந்தித்த பின்னரே, அது நிகழ்ந்தது என்பதை எத்தனை பேர் அறிந்திருப்பார்கள். இந்த உயர்நிலையை அவர் அடைய எத்தனை நாள் உழைத்திருப்பார் என்பதை எவர் அறிவார்.

பல்வேறு தோல்விகளைக் கண்டும், துவண்டு விடாமல், தொடர்ந்து முயற்சித்த ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை, நமக்கு எடுத்துச் சொல்வது ஒன்றே ஒன்று தான் நண்பர்களே! தோல்வியைக்கண்டு நம்பிக்கை இழக்காமல், வாழ்க்கையை நம்பிக்கையுடன் எதிர்நோக்குவதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதற்கு ஆபிரகாம்லிங்கன் அவர்களின் வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாகும்.

அவர் பெற்ற தோல்விகள் ஒன்றா?இரண்டா?அவர் வாழ்க்கையில் தொடர் தோல்விகளைத்தான் கண்டார். அவர் பெற்ற தோல்விப் பட்டியலைப் பார்த்தால் மிரண்டு போவீர்கள். அவர் சந்தித்த கொடுமைகள், வலிகள், தோல்விகள் வேறு எந்தவொரு தலைவரும் பெற்றதில்லை

1816 ஆம் ஆண்டு லிங்கன் குடும்பம் அவர்கள் வசித்த வீட்டிலிருந்து துரத்தப்பட்டது.அதனால் லிங்கன் சிறு வயதிலேயே உழைக்க நேர்ந்தது. 1818 ஆம் ஆண்டு அவரது தாய் இறந்தார். 1831ஆம் ஆண்டு வியாபாரத்தில் தோல்வி அடைந்தார்.1832 ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தோல்வி, 1832ஆம் ஆண்டு தான் பார்த்துவந்த வேலையை இழந்தார். 1833 ஆம் ஆண்டு வியாபாரம் தொடங்க நண்பனிடம் கடன் வாங்கினார். அந்த வியாபாரம் அந்த ஆண்டுக் கடைசியில் திவால் ஆனது. அந்தக் கடனை திருப்பிச் செலுத்த லிங்கனுக்கு 17 வருடங்கள் ஆனது.

தொடர் தோல்விக்குப்பின் 1834ஆம் ஆண்டு சட்டசபைத்தேர்தலில் வெற்றிபெற்றார். 1835 ஆம் ஆண்டு தனக்கு நிச்சயிக்கப்பட்ட காதலி இறந்து போனதால் லிங்கன் மன உளைச்சலுக்கு ஆளானார். 1836 ஆம் ஆண்டு, லிங்கனுக்கு நரம்பு முறிவு பிரச்சனை ஏற்பட்டு. 6 மாதங்கள் படுக்கையில் இருந்தார். 1838 ஆம் ஆண்டு சட்டப்பேரவை நடுவர் தேர்தலில் தோல்வியுற்றார். 1840ஆம் ஆண்டு நகராட்சி தேர்தலில் தோல்வியுற்றார்.1843 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாமன்றத் தேர்தலில் தோல்வியுற்றார். 1846 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாமன்றத்தேர்தலில் வெற்றி பெற்றார். ஆனால் மீண்டும் 1848 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாமன்றத் தேர்தலில் தோல்வியுற்றார்.

1849ஆம் ஆண்டு நில அலுவலர் பணிக்கு முயற்சித்து அதிலும் தோல்வியுற்றார். 1854 ஆம் ஆண்டு செனட்டில் தோல்வியுற்றார். 1856 ஆம் ஆண்டு துணை அதிபர் தேர்தலில் நிற்க முயற்சித்து அதிலும் தோல்வி கண்டார். 1858 ஆம் ஆண்டு மீண்டும் செனட்டில் தோல்வியுற்றார்.




இத்தனை தோல்விகளைக் கண்ட ஆபிரகாம் லிங்கன் நம்பிக்கையோடு தனது பயணத்தை தொடர்ந்த காரணத்தால், இறுதியாக 1860ஆம் ஆண்டு, அமெரிக்காவின் அதிபராக தேர்தலில் வெற்றி பெற்றார். அதன் பின் அவர் செய்த சாதனைகளைக் கண்டுதான் நாம் பாராட்டுகிறோம். திரு.ஆபிரகாம் லிங்கன் அவர்கள் தனது வாழ்க்கையில் பெரும் பாலும் தோல்விகளைத்தான் சந்தித்தார்.

தோல்விகள் என்பது நிரந்தரமானது அல்ல! அவை தற்காலிகமானது என்ற நம்பிக்கையோடு தொடர்ந்து முயற்சிக்கும் மனிதனுக்கு காலம் "சிவப்புக்கம்பளம்" விரித்து வரவேற்கும் என்பதற்கு ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கை ஒரு எடுத்துக்காட்டாகும்.

எனவே வெற்றியாளர்கள் ஒரு நாளும் தோல்வியைச் சந்தித்தது இல்லை! என்ற முடிவுக்கு வந்து விடாதீர்கள்! பல்வேறு தோல்விகள் தொடர்கதையாக அவர்களைத்தொடர்ந்தாலும், நம்பிக்கையோடு அவற்றை யெல்லாம் புறந்தள்ளிவிட்டு, தங்கள் இலக்கை நோக்கிச் சென்றவர்களே வெற்றி பெற்று சாதனையாளராக மாறியுள்ளார்கள்.

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே! அதுவரை இந்தத்தலைப்பில் வெளிவந்துள்ள எனது கருத்துக்களை சற்று சிந்தித்து, தங்கள் கருத்தை பதிவுசெய்ய வேண்டுகிறேன்.

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com



உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும் உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.

# வினைகள் தீர்க்கும்

# வேல்மாறல்

## மகா மந்திரம்

( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் தொகுத்தருளியது )




**தினமும் பாராயணம் செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக**

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில் என பல்வேறு தகவல்களுடன்

விலை ரூபாய் 46/- தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :

**96590 32994**

எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

**தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்**

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2024
42nd ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி – 14

– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!



**இக்கட்டு**

"ஏன் அப்பச்சி! இப்படி பண்ணிட்ட. சொல்லச் சொல்லக் கேக்காம கடன வாங்கி, இப்பப் பாரு இக்கட்டுல கொண்டு வந்து நிப்பாட்டிட்டியே. இப்ப என்ன பண்ணுறது?" என்ற வாசகத்தில் உள்ள இக்கட்டு என்பது தூய தமிழ்ச்சொல். இக்கட்டு என்பதற்கு நெருக்கடி என்பது பொருள். துன்பம் என்பதைக் குறிக்கும் இடுக்கண் என்ற சொல்லிருந்து உருவானதே இக்கட்டு என்பது. இடுக்கண் – இடுக்கட்டு – இக்கட்டு.

### இக்கு

என்ன? மீனா!இக்கு வச்சு பேசுற. சொல்றத தெளிவாச் சொல்லிப்புடு. மனதில் ஒன்று வைத்துக் கொண்டு பேசுவதை இக்கு வைத்துப் பேசுதல் என்பர். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதை இவ்வாறு கூறுவது வழக்கம்.



### எகத்தாளம் (இகத்தாளம்)

"என்னையப் பாத்தா உங்களுக்கெல்லாம் எகத்தாளமாப் போச்சு. எனக்கு ஒரு காலம் வரும் அப்ப நான் யாருன்னு காட்டுறேன்" என்று சண்டைகளின் போது எகத்தாளம் என்ற வார்த்தையை நம்மவர்கள் பயன்படுத்துவது வழக்கம். இகத்தாளம் என்பதே எகத்தாளம் எனப் பேச்சு வழக்கில் மாறியுள்ளது. இகத்தாளம் என்பதற்கு ஏளனம் செய்தல் என்பது பொருள். இன்றைய குழந்தைகளுக்குச் சொல்வதென்றால் கேலி செய்வது என்பது பொருள். இகத்தம் – இகத்தானம் – இகத்தாளம் என்று வழங்கப்பட்டு வருகிறது இச்சொல்.

### இங்கிட்டு

"ஏண்டி ஆத்தா தெய்வானை! கல்யாணமாகி ஆம்படையான் ஊருக்குப் போனதோட சரி! தாயபிள்ளைகளப் பார்கணும்னு உனக்குத் தோணவே இல்லையா? நல்லது கெட்டதுக்கு இங்கிட்டு வந்து போ ஆத்தா!" என்று பிறந்த ஊர் உறவினர்கள் பேசுவதில் உள்ள இங்கிட்டு என்பது, இங்கு, இப்பக்கம் என்ற பொருள்களைத் தரும். ( ஈங்கண் + இடை= ஈங்கணிடை – ஈங்கணிட்டு – இங்கணிட்டு – இங்கிட்டு) ஈங்கணிடை என்ற சொல்லு மறுவி இன்று இங்கிட்டு என்றழைக்கப்படுவது சிறப்பு.

### இங்கிதம்

"ஏழு கழுதை வயசாச்சு. இன்னும் யாருக்கிட்ட எப்படிப் பேசனும்னு இங்கிதமே தெரியல. இப்படியே இருந்த உருப்படவே மாட்ட" என்ற அப்பச்சியின் கடுமையான வார்தைகளில் இங்கிதம் என்பதற்கு மனம் விரும்புகின்ற நற்பண்புகள் என்பது பொருள். பிறர் விரும்புகின்ற வகையிலும், மனம் கோணாத வகையிலும், சூழலுக்கு ஏற்ற வகையிலும் பேசுவது இங்கிதம் எனப் பொருள் படுகிறது.

### இசகுபிசகு

"பாத்து கையவிடு தம்பி! எசகு பிசகா மாட்டிகிட்டுறப் போகுது. அப்புறம் அதுக்கு வைத்தியம் பாக்கணும்" என்று எச்சரிக்கின்ற தாய்மார்களைப் பார்த்திருப்போம். இசகு பிசகு என்பது எசகு பிசகு என்று பேச்சு வழக்கில் மறுவியுள்ளது. இழுக்கு – இசகு, பிழை– பிசகு என்றும் மாறியுள்ளன.

### இசித்தல்

ஏண்டா! பேராண்டி, ஆத்தா இடுப்ப விட்டு இறங்க மாட்டியா, அவளுக்கு இசிக்கப் போகுது. இங்கு சுட்டப்படும் இசித்தல் என்னும்

# கூடைகள் விற்பனைக்கு

அழகான நல்ல தரத்துடன் நீண்ட நாள் உழைக்கக் கூடிய செட்டி நாட்டு கூடைகள் தயாரித்து விற்பனை செய்கிறோம்

உங்கள் வீட்டு உபயோகத்திற்கு மற்றும்
Return gift Purpose க்கும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் கிடைக்கும்.



தொடர்புக்கு:
N.சித்ரா, ஆத்தங்குடி
9585328941



சொல்லுக்கு, நோவுண்டாதல் என்பது பொருள். அதாவது வலியை உண்டாக்குவது என்பது பொருள். இடுப்பில் வலியை உருவாகும் என்று சொல்லவதற்கா இச்சொல் பயன்படுத்தப்பட்டிருகிறது.

**இசைபுடிமானம் ( இசைகுடிமானம்)**

"பங்காளிகளெல்லாம் வாங்கப்பா! இசபுடிமானம் எழுதிரலாம்"என்று திருமணங்களில் பங்காளிகள் பேசக் கேட்டிருப்போம். இசை குடிமானம் என்பதே இசைபுடிமானம் என்று மறுவி வழங்கி வருகிறது. திருமணத்தில் எழுதப்படும் சான்றாவணம்.



இன்னாருக்கும் இன்னாருக்கும் திருமணம் நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்தும் சான்றாக இது அமைகிறது. (இசை – இசைவு, குடிமானம் – குடித்தனம், இல்லறம்) இல்லறம் ஏற்கும் மணமக்களுக்கான ஒப்பந்தம் எனப் பொருள்கொள்ளலாம்.

**எசகேடு – இசைகேடு**

"அப்பத்தா! கழுத்து சுளுக்கிக்கிடுச்சு. வலிக்குது. எசகேடாப் படுத்து கிடந்தபோதே நெனச்சேன். வா வலிச்சு விடுறேன்." என்பதில் இசைகேடு என்பதே எசகேடு என வழங்கப்பட்டு வருகிறது. ஒழுங்கின்மை, தவறான நிலை எனப் பொருள்கொள்ளலாம். தவறான நிலையில் படுத்ததால் சுளுக்கு ஏறிவிட்டது என்பது இதன் பொருள்.

## இட்டலி

நம் நகரத்தார் வீடுகளில் பெரும்பான்மை காலை உணவு இட்டலிதான். உலகின் மிகச் சிறந்த காலை உணவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் இதுவே. தற்போது இட்லி என்று நாம் கூறுகிறோம்.



ஆனால், இன்றும் வயதானவர்கள் இட்டலி என்றே கூறக் கேட்கலாம். இட்டளி என்பதே இட்டலி என மறுவி வந்துள்ளது. இட்டம் என்றால் சிறிய இடத்தில் மாவைத் தேங்கச்செய்தல் என்பது பொருள். சிறிய குழிகளில் மாவை இட்டு நிரப்பிச் செய்வதால் இது இட்டளி எனப் பெயர் பெற்றுள்ளது.

– தொடர்ந்து பேசுவோம்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

**இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில் விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.**

**அலைபேசி எண்ணில் G Pay செய்ய:**

**97917 76534**

**UPI Pin: senaadigital@okicici**

இதழில் விளம்பரம் செய்ய
கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.

**96590 32994**

# தெய்வத் திருமணங்கள் நிகழ்ந்த பங்குனி உத்திரம்...!

– உமாராணி சொக்கலிங்கம்,
நற்சாந்துபட்டி

சைவ வழிபாடுகளிலும், வைணவ வழிபாடுகளிலும் பங்குனி உத்திரம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த இரு சமய வழிபாடுகளிலும் பங்குனி உத்திரம் போல வேறு எந்த மாதத்திலும் இவ்வளவு சிறப்பான விழா வருவது இல்லை.

எல்லா நட்சத்திரங்களும் சிறப்பு மிக்கவைதான் என்றாலும், குறிப்பிட்ட தமிழ் மாதத்தில் வரும் சில நட்சத்திரங்கள் இன்னும் விசேஷமானவை. வைகாசி விசாகம், ஆடிப்பூரம், ஆவணி அவிட்டம், தைப்பூசம், மாசி மகம் இப்படி. இந்த வரிசையில் பங்குனி உத்திரம் மிகவும் சிறப்பானது.

**அப்படி என்ன சிறப்பு இந்த நாளுக்கு உள்ளது?**

மாதம்தோறும் உத்திர நட்சத்திரம் வருகிறது என்றாலும் பங்குனியில் வரும் உத்திரத்திற்கு பெருமை அதிகம். ஏனென்றால் தெய்வங்களே தேர்வு செய்து கொண்ட நட்சத்திரம் அந்த திருநாள்.




சந்திரன் பவுர்ணமி நாளில் கூட சிறு களங்கத்துடன் தான் ஒளி தருவான். ஆனால், பங்குனி மாதத்தில் பூமி மீன ராசியில் இருப்பதால், உத்திர நட்சத்திரத்துடன் சேர்ந்து, ஏழாம் இடமாகிய கன்னியில் நின்று, முழு கலையையும் பெற்று பூமிக்கு ஒளி வழங்குவான். அந்த பூரண பவுர்ணமி நிலாவில் களங்கத்தைக் காண முடியாது. களங்கமில்லாத சந்திர ஒளி உடலுக்கும் மனதுக்கும் நிம்மதி தரும். பல நற்பலன்களைக் கொடுக்கும்.

எனவே, இந்த நாள் கூடுதல் பலன்களைத் தரக்கூடிய நாளாகக் கருதப்படுகிறது.

தெய்வமணம் கமழும் எண்ணற்ற திருநாட்களுள் பங்குனி உத்திரத்திரு நாளும் ஒன்று. இத்திருநாளை தெய்வீகத்திருமண நாளாகவே இந்து சமயம் போற்றிக் கொண்டாடுகிறது. பங்குனி மாதம் பவுர்ணமி திதியோடு உத்திரம் நட்சத்திரமும் சேர்ந்து வரும் திருநாளான பங்குனி உத்திரம் திருநாளில் தான் அநேகர தெய்வீக திருமணங்கள் நடந்தேறியுள்ளன. இந்நாளைக் கல்யாண விரதம் என்றும் அழைப்பர். பங்குனி மாதத்தில் உத்திர நட்சத்திரத்தில் பவுர்ணமி வரும் நாளில் பங்குனி உத்திரம் கொண்டாடப்படுகிறது. சந்திரன் உத்திர நட்சத்திரத்தில் இருப்பதால் இவ்விழாவிற்கு இப்பெயர் ஏற்பட்டது.

பார்வதி – சிவன் திருமணம், முருகன் – தெய்வானை திருமணம், ஆண்டாள் –ரெங்க மன்னார் திருமணம், மீனாட்சி –சுந்தரேஸ்வர் திருமணம் என தெய்வீகத்திருமணங்கள் பலவும் பங்குனி உத்திரத்தில் தான் நிகழ்ந்தன என்று புராணங்கள் கூறுகின்றன.



இவை மட்டுமா ? ராமாயண சகோதரர்கள் நால்வருக்கும் மிதிலையில் இத்திருநாளில் தான் திருமணம் நடைபெற்றது. ராமன் – சீதா, பரதன் – மாண்டவி, லக்ஷ்மணன் – ஊர்மிளா, சத்ருகன் – சுருதகீர்த்தி என நான்கு இதிகாச ஜோடிகளும் திருமணத்தில் சேர்ந்தது பங்குனி உத்திரத்தில்தான்.

ஐயப்பன் பந்தள ராஜாவிற்கு மகனாக பிறந்ததும், பாண்டவர்களில் அர்ச்சுனன் தோன்றியதும், முருகப்பெருமானை தேடிச்சென்று மணந்த வள்ளி அவதாரமும் பங்குனி உத்திரமே.

பங்குனி உத்திர விரதத்தை சிறப்பாக கடைபிடித்தே மஹா விஷ்ணுவின் மார்பில் ஸ்ரீமஹாலட்சுமி இடம் பிடித்தாள் என்று புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிவபெருமானுக்கு முருகன் பிரணவ உபதேசம் உரைத்து அப்பனுக்கே பாடம் சொன்ன சுப்பையாவாக ஆனதும், நெற்றிக்கண் நெருப்பில் மாண்டுபோன மன்மதனை சிவபெருமான் மீண்டும் எழுப்பித்தந்ததும், பங்குனி உத்திரத்தில் நிகழ்ந்ததுதான்.



ஸ்ரீபிரம்மாவே கொண்டாடிய முதல் உற்சவம் பங்குனி உத்திரத்திருவிழா என்கிறது தலபுராணம். ஸ்ரீ ராமானுஜர் பெருமாளின் திருவடியை அடைய தேர்வு செய்ததும் இந்தப் புண்ணிய நாளைத்தான். காரைக்கால் அம்மையார் முக்தி அடைந்ததும் பங்குனி உத்திரத்தில் தான்.

தமிழில் 12 வது மாதமான பங்குனியும், 1 2 வது நட்சத்திரமான உத்திரமும் இணையும் புனித நாள் தான் பங்குனி உத்திரம். சந்திரன் 27 நட்சத்திர கன்னியர்களை மனைவிகளாக ஏற்றுக்கொண்ட தினமும் பங்குனி உத்திர திருநாள் தான்.

### பங்குனி விரத மகிமை



நாம் என்னதான் வாழ்க்கையில் வசதி வாய்ப்புகளோடு இருந்தாலும், சுப நிகழ்வுகள் நடக்க இறைவனின் திருவருள் அவசியம் வேண்டும். அதற்கு கைகொடுப்பது பங்குனி உத்திர விரதம் தான். சிலருக்கு திருமணம் கைகூடாமல் தள்ளிப்போனால், பங்குனி உத்திர நாளில் விரதம் இருந்து இறைவனை வழிபட்டால் வெகு சீக்கிரம் திருமணம் கைகூடும் என்பது ஐதீகம். அதோடு, மனதுக்கு பிடித்தவரை கரம் பிடிக்கவும் பங்குனி உத்திர விரதம் இருப்பது மிகுந்த பலனைக் கொடுக்கும்.

பங்குனி உத்திரப் பெருவிழா தினத்தன்று திருக்கோயில்களில் காலையில் நடைபெறும் இறை திருக்கல்யாண வைபவத்தை கண் குளிர தரிசித்தால், திருமணப் பேறு உண்டாகும், பிரிந்த தம்பதி ஒன்று சேர்வர் என்பது ஐதீகம். இணைந்து வாழ்ந்து வருகிற தம்பதிகள் மேலும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு கருத்து ஒற்றுமையுடன் வாழ்வார்கள் என்பது நம்பிக்கை.



இந்த வருடம் பங்குனி உத்திரம் 11.04.2025 பங்குனி 28, வெள்ளிக் கிழமை வருகிறது பங்குனி உத்திரநாளில் அனைத்து ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். எண்ணற்றஆலயங்களில், சுவாமிஅம்பாள் திருக்கல்யாணம் நடைபெறும். அனைவரும் இந்நாளில் ஆலயம் தரிசனம் செய்து திருக்கல்யாண வைபவத்தைத் தரிசித்து இறையருள் பெறுவோமாக ..!!

# செட்டிநாட்டு கூடைகள் விற்பனைக்கு

இரட்டை வயர் கூடைகள் நல்ல தரத்துடன்
டிசைன் மற்றும் மூடிகூடைகள் சில்லறையாகவும்,
மொத்தமாகவும் கிடைக்கும்.கல்யாணம்மற்ற
விசேஷங்களுக்கும் பரிசுப்பொருளாக கொடுக்கலாம்







தொடர்புக்கு:
எம்.சொக்கலிங்கம் அபிராமி ஆத்தங்குடி
9942838666, 9442722817

# வாழ்த்தி மகிழ்கிறோம்



தேவகோட்டை முல்லை மு. கருப்பையா –கரு. அபிராமி தம்பதிகளின் மகன் கரு. முத்துக்குமாருக்கும் – புதுவயல் சித. மீனாட்சிசுந்தரம்– மீனாட்சி தம்பதிகளின் மகள் மீ. மங்கையர்க்கரசிக்கும். 19.1.2024 ஞாயிற்றுக்கிழமை புதுவயல் ஆண்டான் செட்டியார் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது


மணமக்கள் வளம் பல பெற்று நலமுடன் வாழ
நாம் நகரத்தார் மின்னிதழ் வாழ்த்துகிறது .

# பெண் என்பவள்...



ஔஷதம் போன்றவள்
அண்டை அயலார்
எட்டிப் பிடிக்க இயலா
எட்டாக் கனியவள்

தட்டிக் கொடுப்போரை
தலை வணங்குபவள்
தூற்றிப் பேசுவோரை
தூர எறிபவள்



அறிய முற்படுவோர்க்கு
அகராதி ஆனவள்
அறியாத அற்பர்களுக்கு
சொற்பம் ஆனவள்

கற்பு நெறியில்
கண்ணகிக்கு நிகரவள்
களங்கம் கற்பிப்போர்க்கு
காட்டுத் தீயவள்

உலகக் குடும்பத்திற்கு
உரமாகத் திகழ்பவள்
இங்கு நம்மிடையே
வரமாக வந்திருப்பவள்

அமைதி நிறைந்தவள்
அடக்கம் உடையவள்
ஆர்ப்பாட்டம் அற்றவள்
இன்முகம் கொண்டவள்

ஈகை குணம் மிகுந்தவள்
உண்மை உடையவள்
ஊக்கம் கொடுப்பவள்
எளிமை நிறைந்தவள்

ஏற்றம் காண்பவள்
ஐஸ்வர்யம் நிறைந்தவள்
ஒழுக்கம் பேணுபவள்
ஓடைநீரைப் போல
தெளிவு பெற்றவள்



–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

## பெண் கதவு... ஆண் பூட்டு..! – 13

# மகிளான மருமகள்



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931



கஷ்டம் எனத் தெரிந்தும் இஷ்டப்பட்ட ஆண்களுடன் வாழும் பெண்கள் தேவதைகள்.

" போனவாரம் எங்க மாமியார் கிணத்துல விழுந்து செத்து போயிட்டாங்க". என விமலா சொல்ல, அதற்கு கமலா, "என் வீட்டிலும்தான் கிணறு இருக்கு.. மாமியார் இருக்காங்க. எதுக்கும் கொடுப்பினை வேண்டும்" என்று வருத்தமாகச் சொன்னாள்.

'அது சரி எல்லாம் தன்னால நடக்கும்னு கையைக் கட்டிக் கொண்டிந்தால் ஆச்சா"என விமலா கூற அதிர்ந்து நோக்கிய கமலா, ஒரு முடிவோடு வீட்டிற்கு வந்தாள். படித்திருக்கிறான் என்ற ஒரே காரணத்திற்காக, பணக்கார வீட்டிலிருந்து மருமகளாக வந்து, ராமனாதனுக்கு வாக்கப்பட்டவள் கமலா புகுந்த வீட்டில் தகுதி குறைவான மாமியாரோடு ஒத்துப் போகாமல் அதிகாரத்தோடு

வலம் வந்தாள், மாமியார், மருமகள் இருவருக்கும் ஒத்து வரவில்லை, சண்டை உச்ச கட்டத்தை எட்டியது, வீடே அல்ல கோலப்பட்டது. இராமனாதன் வெந்து, நொந்து போனான், யார் பக்கம் சாய்வது எனத் தெரியாமல் ஓடிவிடலாமா? என்ற முடிவில் இருந்தான்.



அனைத்துக்கும் முடிவு கட்ட, கமலா ஒரு முடிவுக்கு வந்தாள், மாமியாரை மேலே அனுப்புவது தான் அம்முடிவு, தன் பிறந்த வீட்டு குடும்ப மருத்துவரைச் சந்தித்து விபரம் சொல்லி விஷ மருந்து கேட்டாள், அவரும் அவள் நலம் விரும்பி, மருந்தைக் கொடுத்து, "உடனடியாகக் மேலே அனுப்பிவிடாதே, உன்மேலே சந்தேகம் வரும், சிறிது சிறிதாக ஆறுமாதங்களுக்குக் கொடு, உன் மீது சந்தேகம் வராது.

அதே நேரம் ஆறு மாதத்தில் மேலே செல்லக்கூடிய உன் மாமியார் பாவம், அவரை எதிர்த்துப் பேசாதே, அன்பாக நடந்து கொள்", எனக் கூறினார். மருமகளும் அன்றிலிருந்து மாமியாரை எதிர்த்தும் மறுத்தும் பேசாமல், அன்பாக நடந்து கொண்டு மாமியார் அறியாமல் விஷமருந்தை பாலில் சிறிது சிறிதாக கலந்து கொடுத்துவந்தாள் விளைவை அறியாத மாமியார் மருமகளின் நடவடிக்கைக் கண்டு வியந்து "இவ்வளவு நல்லவளாக இருக்கிறாளே, நான் தான் அவளைப்பற்றி புரிந்துக் கொள்ளாமல் நடந்து விடுகிறேன்" என எண்ணி நாளடைவில் மருமகள் மீது அன்பு பாராட்டத் தொடங்கினார்.



சிறிது நாட்களில் மாமியார், மருமகள் என்ற நிலைமாறி அம்மா – மகள் என்ற பாசம் குடும்பத்தில் ஒளிவீசியது, மகன் ராமனாதன் மகிழ்ச்சிக்கடலில் நீந்த, மருமகள் கமலா ஒரு முடிவுக்கு வந்து மருத்துவரிடம் ஓடி "என் மாமியார் மிகவும் அன்பானவர்கள், என் மீது அவர் மகளைப் போல பாசம் காட்டுகிறார், நான்தான் அவரை புரிந்து கொள்ளாமல், மேலே அனுப்பத் துணிந்து விட்டேன், மாற்று மருந்து கொடுத்து அவரைக் காப்பாற்றுங்கள் டாக்டர்" என்று கதறினாள்.


மருத்துவர் சிரித்துக் கொண்டே 'நான் தந்தது, விஷமல்ல சத்து மருந்து' என்றார். மகிழ்வோடு இல்லம் சென்ற கமலா தன் மாமியாரை, பெற்ற அம்மாவாகவே எண்ணித் தொடர்ந்தாள். ஏதும் அறியாத மாமியாருக்குத்தான் அவள். ஏற்கனவே மகளாகிவிட்டாளே.

ஆகவே யாராவது விட்டுக்கொடுத்தால் இல்லறம் சிறக்கும். போட்டி, பொறைமை நீக்கி சகிப்புத் தன்மை கொண்டு, நல்ல எண்ணங்களைப் பற்றி இல்லறம் சிறக்கச் செய்வது மருமகள் கையில் மட்டுமல்ல, மாமியார் கையிலும் தான் உள்ளது.

நன்றி : ஓவியம் மோகன் மணிமாலா

# மழலை மழைத்துளிகள்..!!!

**குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்**



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

## மூத்தோர்க்கு வணக்கம்



தாத்தா சொல்வார் பழங்கதைகள்
... பாட்டி சொல்வார் படக்கதைகள்
தாத்தாவுடனே கடைகளுக்கு
... மாலையில் செல்வேன் கைப்பிடித்து
பாட்டி சொல்லும் வேலைகளைப்
... பணிவாய்ச் செய்வேன் பரிசு உண்டு
தாத்தா பாட்டி என்றிரண்டு
... கண்போல் உறவுகள் எனக்கு உண்டு!

## மயிலே மயிலே

மயிலே மயிலே நீயாடு
... மழைவரப் போகுது நீயாடு
மண்ணும் வாசனை தருகிறது
... மேகம் கருப்பாய்த் தெரிகிறது
விசிறி யினைப்போல் தொகையினை
... விரித்தே ஆண்மயில் நீயாடு
புத்தகத்துள் நான் வைப்பதற்கு
... புது இறகொன்று தந்துவிடு



ஆச்சீஸ் கிச்சன்



# கிட்சன் டிப்ஸ்

பொதுவாகவே சமைக்கும் அனைவருக்கும் பிடித்த மாதிரி சமைக்க வேண்டும் என்பது தான் இல்லத்தரசிகளின் பெரிய ஆசை.

இதற்காக புதிய புதிய வகைகளில் சமையல்களை செய்வார்கள் அப்படி சமையலில் அசத்த சில சூப்பரான டிப்ஸ்களை இங்கே பார்க்கலாம்.

- அரிசி களைந்த தண்ணீரில் கிழங்குகளை வேக வைத்தால் சீக்கிரமாக வெந்துவிடும்.
- மோர்க்குழம்பு செய்யும்போது மிளகாயை நன்றாக வதக்கி அரைத்து சேர்த்தால் குழம்பு நல்ல நிறமாக காட்சி அளிக்கும். ருசியாகவும் இருக்கும்.
- பாகற்காய் குழம்பில் கேரட் ஒன்றை துண்டுகளாக நறுக்கிப் போட்டால், கசப்புத்தன்மை அதிகம் இருக்காது.
- கீரையை வேகவிடும்போது சிறிதளவு வெண்ணெய் அல்லது எண்ணெய் சேர்த்து வேகவைத்தால் பச்சை நிறம் மாறாது; ருசியாகவும் இருக்கும்.



- தக்காளி சூப் நீர்த்துப் போய்விட்டால் மாவு கரைத்து விடுவதற்கு பதில், வெந்த உருளைக்கிழங்கு ஒன்றை மசித்து சேர்த்தால் ருசியும் கூடும்; சத்தும் அதிகம் கிடைக்கும்.
- வடை தட்டும்போது உள்ளே ஒரு பனீர் துண்டை வைத்து மாவால் மூடி எண்ணெயில் போட்டுப் பொரித்து எடுத்தால், வடை வித்தியாசமான ருசியுடன் இருக்கும்.
- இட்லிமாவு அரைத்தபின் ஒரு வெற்றிலையைக் கிள்ளிப்போட்டு வைத்தால், மாவு பொங்கி வழியாது.
- பூரிக்கு மா பிசையும் போது கால் தேக்கரண்டி ரவை சேர்த்துக் கொண்டால் பூரி புஸு புஸுவெ இருக்கும்.
- சூப் செய்யும் போது சோள மாவிற்கு பதிலாக ஒரு தேக்கரண்டி அவலை வறுத்து சேர்த்தால் சூப் கெட்டியாகவும் ருசியாகவும் இருக்கும்.
- முட்டையில் ஆம்லெட் செய்யும் போது முட்டையை நன்கு அடித்து அதனுள் சிறிது கடலை மா சேர்த்தால் ஆம்லெட் சுவையாகவும் மணமாகவும் இருக்கும்.



- வெண்டைக்காய் கறி செய்யும்போது சிறிது தயிர் ஊற்றி வதக்கினால் வழவழப்பு நீங்கி மொறுமொறுப்பாக இருக்கும்.
- தேங்காய்ப் பால் எடுக்கும்போது சிறிது சமையல் உப்பைச் சேர்த்தால் நிறைய பால் வரும்.
- கால்சியம் மாத்திரைகளை சாப்பிடுபவர்கள் நிறைய தண்ணீர் குடிக்க வேண்டும். அப்போதுதான் கிட்னியில் கல் உண்டாகாது என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.
- முட்டை 1 மாதம் வரை கெடாமல் இருக்க அதன் மீது சமையல் எண்ணெய்யை தடவி வைக்கலாம்.
- மழை, குளிர் காலங்களில் வடகம் நமத்துப் போய் நன்றாகப் பொரியாது. வெறும் வாணலியை அடுப்பில் வைத்துச் சூடேற்றி அதில், வடகத்தைப் போட்டு, சற்றுப் புரட்டி எடுத்து விட்டு எண்ணெயில் பொரித்தால் நன்றாகப் பொரியும்.
- வாழைத்தண்டுகள், கீரைத் தண்டுகள் மற்றும் கொத்தமல்லி இலைகள் வாடாமல் இருக்க அவற்றை அலுமினிய காகிதத்தில் சுற்றி வைக்கலாம்.
- கோதுமை மாவு அரைக்கும்போது அதனுடன் சோயா பீன்ஸையும் சேர்த்து அரைத்தால் சப்பாத்திகள் ஊட்டம் கூடுவதுடன் ருசியும் அபாரமாக இருக்கும்.



- பிரட் காய்ந்து விட்டதா? கவலை வேண்டாம். காய்ந்து போன பிரட், பன் போன்றவைகளை எடுத்துத் தண்ணீர் கலந்து பிசைந்துவிடுங்கள். நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி, வெங்காயம், பூண்டு, தேவைகேற்ப உப்பு சேர்த்து பிசைந்து கொள்ளுங்கள். கொஞ்சம் எண்ணெயை சுட வைத்து இந்த கலவையை வடை சுடுவது போல போட்டு பொன்னிறமாகும் வரை பொரித்து எடுங்கள்.
- டீத்தூள் வைத்திருக்கும் பாட்டிலில் உபயோகித்த ஏலக்காய் தோல்களைப் போட்டு வைத்திருந்தால் டீ ஏலக்காய் மணத்தோடு சுவையாக இருக்கும்.
- வீட்டில் ஜாம் தயாரிக்க விரும்பினால் சரியாகப் பழுக்காத பழங்களையே பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் ஜாம் நீண்ட நாட்களுக்குக் கெடாமல் இருக்கும்.

இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

# தூக்கம் கெடு

தம்பி கொஞ்சம் நீயும் கேளு
அதிக தூக்கம் வேண்டாம் மீளு

வாழ்க்கையை துரத்தி ஓடு ஓடு
தூக்கத்தைத் தூக்கித் தூக்கில் போடு

முயல் போல் இங்கு தூக்கம் கொண்டால்
ஆமை முந்திய கதையாய் ஆகும்

முயற்சிகள் இன்றி முடங்கிப் போனால்
விரும்பிய வாழ்க்கை விடைப்பெற்றுப் போகும்



அடிக்கடித் தூங்குதல் சுகமாய் இருக்கும்
நிரந்தரத் தூக்கம் யாருக்கும் கசக்கும்

விடிந்தபின் தூக்கம் வெற்றியை விரட்டும்
தூக்கத்தின் சுவையோ இனிப்பாய் திகட்டும்

தூக்கத்தில் கனவு காண்பது முறை
தூக்கத்தை கனவாய் கொள்வதா நிறை?

உறக்கம் கெடுக்க வந்த இது உபன்யாசம்
ஊருக்கும் எனக்கும் கூட இந்த உபதேசம்.



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி



# சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள்

– ச.முத்துலெட்சுமி,
திருநெல்வேலி
9940484885



சென்ற இதழ்களில், ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரின் முதல் பகுதியில், ஆண்டாள் நாச்சியார் பிறந்து வளர்ந்த நிகழ்வுகளையும், ஆண்டாள் நாச்சியார் எப்படி கண்ணனைத் தான் சரணாகதி அடைவது என்று பெரியாழ்வாரிடம் கேட்க, பெரியாழ்வார் மார்கழி மாதத்தில் பாவை நோன்பை இருந்து கண்ணனைச் சென்று அடையலாம் என்று வழி சொல்லும் வரை பார்த்தோம்.

இரண்டாம் பகுதியில், ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்த திருப்பாவை,கடவுளை அடைய முக்கியமான 4 விதமான வழிகள், குறிப்பாக நாயன்மார்களும், ஆழ்வார்களும் பின்பற்றிய நாயக நாயகி பாவம் பற்றியும், அறிவியல் பூர்வமான காலதத்துவத்தையும், மந்திரங்களினால் நீரில் உண்டாகும் அதிசயங்களை பற்றியும் கண்டோம். இவை அனைத்தையும் நம்முன்னோர்கள் எத்தனையோ யுகங்களாக அறிந்திருக்கின்றனர். ஆண்டாளின் ஒவ்வொரு செயலிலும் பக்தியும் அறிவிலும் இணைந்திருப்பதை கண்டோம்.

இந்த இதழில், கதைசுரபி என்ற எனது யூடியூப் சேனலில் ஸ்ரீஆண்டாள் நாச்சியாரின் இரண்டாம்பகுதியில் – ஆண்டாள் நாச்சியார் அருளிச் செய்த திருப்பாவை, நாச்சியார் திருமொழி மற்றும் ஆண்டாள் நாச்சியாரின் திருமண வைபவம் பற்றி வெளியிட்ட ஆராய்ச்சி காணொளியின் சாராம்சம் பற்றி சற்று விரிவாகக் காண்போம். ஆண்டாளின் ஒவ்வொரு செயலிலும் பக்தியும் அறிவியலும் இணைந்திருப்பதை இதில் விளக்க முற்படுகிறேன்.

## இரண்டாவது பாசுரத்தில்,

**வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்**
**செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற் கடலுள்**
**பையத் துயின்ற பரமன் அடி பாடி,**
**நெய் உண்ணோம், பால் உண்ணோம், நாட்காலே நீராடி,**
**மையிட்டு எழுதோம், மலர் இட்டு நாம் முடியோம்,**
**செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்று ஓதோம்,**
**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி**
**உய்யுமாறு எண்ணி உகந்து – ஏலோர் எம்பாவாய்.**

கண்ணனுக்கு மிகவும் பிடித்த நெய்யையும், பாலையும் மார்கழி மாதம் முழுவதும் நாங்கள் சாப்பிட மாட்டோம் ஏனென்றால், அந்த எல்லா நெய்யும் பாலும் கண்ணனுக்கே போய்ச் சேரவேண்டும். ஆண்டாளுக்கு கண்ணன் மீது அவ்வளவு பாசம். விடியற்காலை குளித்துவிட்டு, கண்ணுக்கு மை கிடையாது, கூந்தலுக்கு மலர் கிடையாது. செய்யக்கூடாத காரியங்களைச் செய்யமாட்டோம், கோள் சொல்லமாட்டோம். தானத்தையும் பிச்சையையும் எங்களால் முடிந்த வரை கொடுப்போம் என்று இவ்வாறெல்லாம் எண்ணி சந்தோஷப்படுவது நம் பாவை நோன்பு. இறைவன் எங்களுக்கு கொடுத்திருக்கிற எங்களுடைய நாவால் இறைவனின் துதியைப் பாடுவதை மட்டுமே எங்களுடைய கடமையாக வைப்போம் என்று இரண்டாவது பாசுரத்தில் விளக்கமாக பாடி இருக்கிறார்.

பாவை நோன்பு நோற்கும் ஆண்டாளும் தோழிகளும், திருப்பாவை பாடல் 2வது பாசுரம், "வையத்து வாழ்வீர்காள்" பாசுரத்தில், "நெய்யுண்ணோம் பாலுண்ணோம்" என்று சபதம் செய்த இவர்கள், திருப்பாவை பாடல் 27வது



பாசுரத்தில் நோன்பு நோற்று வெற்றிகரமாக முடிக்கும் பொழுது, வெற்றி பெற்றவர்களுக்கே வெள்ளி கோப்பை என்பது போல் அக்கார வடிசல் என்கிற சுவை மிக்க பாற்சோறு உணவையும், நல்ல ஆடை அணிகலன்களையும் வேண்டுகின்றனர். அதுவரை கருமமே கண் ஆயினார் என்று தூய தவ நெறியில் பக்தியுடன் நோன்பு நோற்கிறார்கள்.

**கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்**
**பாடிப்பறை கொண்டு யாம்பெறு சம்மானம்**
**நாடு புகழும் பரிசினால் நன்றாக**
**சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே**
**பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்**
**ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு**
**மூடநெய் பெய்து முழங்கை வழிவார**
**கூடி யிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்.**

இங்கு ஆண்டாளின் வளர்ப்பு தந்தையான பெரியாழ்வார் தனது திருப்பல்லாண்டில்

**வாழாட் பட்டுநின் றீருள்ளீ ரேல்வந்து மண்ணும் மணமும்கொண்மின்**
**கூழாட் பட்டுநின் றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்**

என்ற வரிகளில் மனித பிறப்பின் (வாழ்வின்) உயர்ந்த லட்சியமான ஆன்மீக முன்னேற்றத்தை விரும்புவர்கள் மட்டும் வாருங்கள்.



வெறும் கூழுக்காக வருபவர்கள் தயவு செய்து விலகி இருங்கள் என்று தெள்ளத்தெளிவாக ஒரு தந்தையின் வார்த்தையில் கூறுகிறார். இதே கருத்தை தான் நமது ஆண்டாள் பாசுரம் 2 மற்றும் பாசுரம் 27ல் எத்தனை மென்மையாக பாடி, வாழ்ந்து காட்டி இருக்கிறாள். இந்த அண்ட சரசாரங்களுக்கும் தாயாய் விளங்குபவளால் மட்டும் தான் இவ்வாறு கூற முடியும். எனவே தான் நாம் ஆண்டாள் தாயார் என்று அன்புடன் அழைக்கிறோம்.

மூன்றாவது பாசுரத்தில்,


**ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி**
**நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்,**
**தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்கு பெறும் செந்நெல் ஊடு கயல் உகளப்**
**பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்**
**தேங்காதே புக்கு இருந்து சீர்த்த முலை பற்றி**
**வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்து ஏலோர் எம்பாவாய்.**

ஓங்கி உலகளந்த உத்தமனின் பெயரைப் பாடி நோன்பு இருப்பதால், நாடு முழுவதும் தீமை இல்லாமல் மாதம் மூன்று முறை மழை பெய்யும். அதனால் பூமி செழித்து மக்களுக்கு கிடைக்கும் பயன்களைக் கூறி, இத்தகைய செல்வங்களை எந்த நாளும் நீங்காமல் பெற்று நிறைவோம் என்று ஆண்டாள் மங்களாசாசனம் செய்கிறார்.

நான்காவது பாசுரத்தில், நாடெங்கும் மழை பெய்து, உலகம் அனைத்தும் வாழ, நாங்களும் மகிழ்ந்து மார்கழி நோன்புக்கு நீராட வேண்டும் என பாடி இருக்கிறார்.

**ஆழிமழைக்கண்ணா! ஒன்றுநீகைகரவேல்**
**ஆழியுள்புக்குமுகந்துகொடார்த்தேறி,**
**ஊழிமுதல்வன்உருவம்போல்மெய்கறுத்து**
**பாழியந்தோளுடைப்பற்பநாபன்கையில்**
**ஆழிபோல்மின்னி, வலம்புரிபோல்நின்றதிர்ந்து,**
**தாழாதேசார்ங்கம்உதைத்தசரமழைபோல்**
**வாழஉலகினில்பெய்திடாய், நாங்களும்**
**மார்கழிநீராடமகிழ்ந்தேலோரெம்பாவாய்.**

மழை எப்படி உருவாகிறது என்ற அறிவியல் உண்மையை கூறும் பாசுரம். இந்த water cycle என்னும் அறிவியல் ஆவணம் முதன் முதலில் 1 5 7 0 ஆம் ஆண்டு தான் அறிவியல் பூர்வமாக கிடைத்திருக்கிறது. அதாவது 450 ஆண்டுகளுக்கு முன்பு தான் மழை பற்றிய ஒரு சரியான வரையறை அறிவியல் பூர்வமாக கிடைத்தது. ஆனால் 1200 ஆண்டுகளுக்கு முன்பே ஆண்டாள் தன்னுடைய பாசுரத்தில் மழைசார்ந்த அறிவியல் உண்மையை மிகச்சரியாக அறிவியலும் ஆன்மீகமும் கலந்து பதிவு செய்து இருக்கிறார். ஞானத்தில் சிறந்த நன்னாடு நம் பாரத நாடு.



இந்த பாசுரத்தில், "ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கருத்து" என்ற உவமையை கொடுத்திருக்கிறார் ஆண்டாள். ஊழிக்கு (அண்ட வெடிப்பு) முன் கருமை இருந்ததா? ஏன் இருக்கணும்? எல்லாரும் இறைவனை ஜோதி, சூரியக் கோடி பிரகாசன் என்றெல்லாம் சொல்லும்போது, ஆண்டாள் ஊழிக்கும் முன்பிருந்த கருமை என்று சொல்கிறார். இது என்ன விசித்திரம்! இந்த இடத்தில் அவளின் அறிவியல் பார்வையை கொஞ்சம் எட்டிப்பார்க்க வேண்டும். என்னவென்றால், இந்தப் பிரபஞ்சத்துக்கு ஆதாரமாக ஒரு கருங்குழி, அதாவது blackhole என்று ஒன்று இருப்பதாக அறிவியலில் சொல்லப்பட்டிருக்கிறது. அண்ட சராசரத்தில் நம் பால்வெளி அண்டத்தோட (Milky way Galaxy) அச்சு இப்படி ஒரு கருங்குழிதான் என்ற இந்த உண்மைகளை ஆய்வு செய்த பேராசிரியர் சந்தரசேகருக்குத்தான் நோபல் பரிசு கிடைத்தது. இந்தக் கருங்குழி பற்றி ஆண்டாளுக்கு அப்பவே தெரிந்து இருக்கிறது. அதைத்தான் அவர் ஊழி முதல்வன் என்று சொல்லி இருக்கிறார். ஆதிகாலத்திலிருந்தே இயற்கையின் சிறப்பை அறிந்து நம் மக்கள் இயற்கையைப் போற்றிப் பாதுகாத்து வணங்கி வாழ்ந்து வந்தார்கள். இயற்கையோடு மனிதர்கள் கொண்ட நெருங்கிய உறவால்தான், உலகில் கொட்டிக்கிடக்கும் உண்மை தன்மையை, இயல்பை, ஞானத்தை அவர்களால் ரொம்ப எளிதாக உணர்ந்து கொள்ள முடிந்தது. இயற்கையோடு இணைந்து, பெருவாழ்வு வாழ்ந்த, அறிவிச்சுடர் மிகுந்த பெண் தான் கோதை ஆண்டாள்.

அளப்பரிய அறிவியல் ஞானத்தோடு திகழ்ந்த திருப்பாவை பாசுரங்களில், ஆண்டாளுடைய ஆன்மீகம் மற்றும் அறிவியல் பார்வை அவ்வளவு அழகாக உணர முடிகிறது. அந்த பாசுரங்களில் சொற்சுவை பொருட்சுவை மட்டும் இல்லாமல் அறிவியல் சுவையும் நிரம்பி இருக்கிறது.

ஐந்தாவது பாசுரத்தில் நோன்பு இருப்பதால் நமக்கு ஏற்படும் தடைகளையும் அந்த தடைகளை நீக்குவதற்கு கண்ணன் ஒருவரால் மட்டும்தான் முடியும் என்ற உண்மையையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார் ஆண்டாள்.

ஆறாவது பாசுரத்தில், மார்கழி மாதத்தில், அந்த கடுமையான குளிரில், அதிகாலையிலேயே எழுந்து, நீராடி, கண்ணனை தரிசனம் பண்ண வேண்டும், தன்னுடைய எல்லா வேண்டுதல் களையும் அவனிடம் தெரிவிக்கவேண்டும் என்று ஆண்டாள் கண்ணனை தரிசிப்பதற்காகக் கிளம்பும் போது, தான் மட்டும் போகாமல் தன்னுடைய தோழிகள் அனைவருக்கும் அந்தப் பலன் கிடைக்க வேண்டும் என்ற நல்ல, மேலான எண்ணத்தால் தன்னுடைய தோழிகள் அனைவரையும் அழைத்துக் கொண்டு போவது அந்தப் பாசுரங்களில் காணப்படுகிறது. அதாவது ஆறாவது பாசுரத்திலிருந்து பதினைந்தாவது பாசுரங்கள் வரைக்கும் அவருடைய தோழிகள் அனைவரையும் எழுப்பி, ஒவ்வொரு தோழியையும் தனித்தனியாக நீ வா, நீ வா, நீ வா....தூங்கியது போதும், என உரிமையோடு எழுப்பி, கண்ணனை தரிசிக்க வேண்டும், சரணாகதி அடைய வேண்டும் என்ற அந்த சரணாகதி பேரின்பத்தை தான் மட்டும் இல்லாமல் தன்னுடைய தோழிகளும் அனுபவிக்கவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் அழைத்துக் கொண்டு போனார் ஆண்டாள். தோழிகளை மட்டுமா அழைக்கிறார். தோழிகள் என்ற பதத்தில் நம்மையும் அல்லவா அன்புடன் அழைக்கிறார்.

13 வது பாசுரத்தில்,

**புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனை**
**கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்ப்**
**பிள்ளைகள் எல்லாரும் பாவைக்–களம் புக்கார்;**
**வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று;**
**புள்ளும் சிலம்பின காண், போதரிக் கண்ணினாய்!**
**குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே**
**பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்**
**கள்ளம் தவிர்ந்து கலந்து ஏலோர் எம்பாவாய்.**

இந்த பாசுரத்தில், "வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று" என்ற இந்த வரி மிகவும் பிரபலமானது. சுக்கிரன் குரு கிரக நிலைகளைக் கொண்டு ஆண்டாள் எந்த காலத்தில் திருப்பாவை பாடி இருப்பார் என்று ஆராய்ச்சி செய்துள்ளார்கள். வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிய அபூர்வ வானியல் நிகழ்வு கி.பி. 885 நவம்பர் 25 மற்றும் கி.பி. 886 டிசம்பர் 24 ஆகிய இரண்டு ஆண்டுகளில் வெள்ளியும் வியாழனும் எதிரெதிரே தோன்றி மறையும் நிகழ்வு துல்லியமாக நிகழ்ந்துள்ளபடியால் இந்த தேதிகளில் ஒன்று மட்டும் ஆண்டாள் பாடி அருளிய திருப்பாவை 13 ஆம் பாசுரம் பாடிய நாளாக இருக்க வாய்ப்புள்ளது.

பிருந்தாவனத்துக்கு தன் தோழிகள் அனைவரையும் அழைத்துக் கொண்டு போய், அங்கு நந்தகோபன் வீட்டில் இருக்கும் காவலாளியை எழுப்புவது போலவும், அதன்பின் நந்தகோபன், யசோதை, நப்பின்னை பிராட்டிஇவர்கள் அனைவரையும் எழுப்புவது போலவும், கண்ணன் மீது தனக்கு இருக்கும் பக்தி, காதல் மற்றும் சரணாகதி தத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் கடைசி 15 பாசுரங்களையும்  ஆண்டாள் பாடி இருக்கிறார்.



கடைசி பாடலான 30 ஆவது பாசுரத்தில், திருப்பாவை முப்பது பாடல்களையும் பாடுவோர் அடையும் பேரின்பம் மற்றும் நன்மைகள் என்னவென்று விளக்கி திருப்பாவையை பாடி முடித்தார் ஆண்டாள்.

திருப்பாவை படிப்பதால் நாட்டில் தேவையான நேரத்தில் தேவையான அளவு மழை பெய்யும். அதனால் நாடு செழிக்கும். நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். குழந்தைகள் நன்றாக படிப்பார்கள். திருமணம் ஆகாத கன்னிப் பெண்களுக்கு நல்ல வாழ்க்கை துணை அமையும்.

– தொடரும்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# நம் நகரத்தார்

# குமரன் பதிப்பகம்

## தேவகோட்டை திரு.எஸ்.வைரவன்

அன்று புத்தகக்கடையில் விற்பனையாளர்!
இன்று பாரே போற்றும் புத்தகப்பதிப்பாளர்!.

இம்மாத இதழில் குமரன் பதிப்பகத்தின் உரிமையாளர், எளிமையின் சிகரம் தேவகோட்டை திரு.எஸ்.வைரவன் அவர்களோடு ஒரு நேர்காணல்!

நேர்காணல் : கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

ஜனவரி மாதத்தின் மூன்றாவது புதன்கிழமையன்று பரபரப்பும், ஆள் நடமாட்டமும்,சாலை முழுவதும் குறுக்கு நெடுக்குமாகச் செல்லும் வாகனங்களும் நிறைந்திருக்கும், சென்னை தியாகராயநகரில், டாக்டர் நடேசன் பூங்காவின் அருகிலுள்ள கண்ணதாசன் சாலையிலுள்ள குமரன் பதிப்பக அலுவலகத்தின் உள்ளே சென்றேன்.



"வாங்க"என்று என்னை புன்னகையுடன், கரம்கூப்பி அழைத்தவர், குமரன் பதிப்பகத்தின் உரிமையாளர், தேவகோட்டை தந்த நல்ல பண்பாளர், 79 வயதே ஆன இளைஞர் திரு.எஸ். வைரவன் அவர்கள். வெளிர்மஞ்சள் சட்டை, அதற்கேற்ற பேண்ட் நெற்றியிலே திருநீறு, முகத்தினிலே புன்னகை, அதிர்ந்து பேசாத்தெரியாத மனிதர், முதலாளி என்ற பந்தா சிறிதும் இல்லாத மனிதர், அலுவலகத்தின் உள்ளே நுழைந்துவிட்டால் தானும் ஒரு தொழிலாளி என்று எண்ணுகின்ற குணக்குன்று, என்னை அருகிலே அமரச்சொல்லி விட்டு,அதன்பின் தான் அமர்ந்த பண்புக்குச் சொந்தக்காரர். நானும் ஒரு நாடு போற்றும் நகரத்தார் என்று தன் விருந்தோம்பல் பண்பால் என்னை வியக்க வைத்த பேராளர்.அவரோடு சில நிமிடங்கள் நான் உரையாடியபோதே, பதிப்புத்துறையில் அவருக்குள்ள ஞானத்தையும், அனுபவத்தையும் நான் அறிந்து, உணர்ந்து மகிழ்ந்தேன். அவரது ஆற்றல் கண்டு மலைத்து நின்றேன்.

பதிப்புத் துறையில் பல்வேறு சாதனைகளைப் படைத்த அந்த மனிதர், காட்சிக்கு எளியராய், கடுஞ்சொல் கூறாத மனிதராய், கற்கண்டுப் பேச்சாளராய், காண்பவரை ஈர்க்கும் முகத்தராய் விளங்குகிறார்.

இன்றைக்கு புகழ்பெற்றுத் திகழ்கின்ற திரு.வி.ஜி.பி. சகோதரர்கள், தங்களின் உயர்வுக்காக அந்தக் காலத்தில், சைக்கிளில் ரேடியோ மற்றும் மின்விசிறி ஆகியவற்றை கட்டிக் கொண்டு,தெருத்தெருவாக போய் விற்றுத்தங்கள் வியாபாரத்தைத் தொடங்கியவர்கள்.

அந்த அனுபவத்தால் மக்களின் மனதை அறிந்து, பின்னாளில் பல்வேறு ஊர்களில் மர்பி ரேடியோவையும் மின்சாதனங்களையும் விற்கும் கடைகளைத் திறந்து,மக்களுக்கு பொருட்களைத்தவணை முறைக்கு விற்பனை செய்து புகழ்பெற்றார்கள் என்பது வரலாறு.

அதேபோல புத்தகத்தின் மீது காதல் கொண்ட திரு.எஸ். வைரவன் அவர்கள் சொந்தமாக கடைபோட்டு புத்தகங்களை விற்பனை செய்ய முடியாத காரணத்தால், தான் வைத்திருந்த சைக்கிளை நம்பி, அதில் புத்தகக் கட்டுகளை வைத்துக் கொண்டு, நம்பிக்கையின் துணையோடு, நல்லவர் களின் ஆதரவோடு சென்னையிலுள்ள ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரியாக ஏறி இறங்கி புத்தகங்களை விற்றார். அவர் கால்படாத பள்ளிகள்,கல்லூரிகளே இல்லையென்றே சொல்லலாம். பின் வெளியூர் சென்று அங்கும் இதுபோல சைக்கிளில் சென்று புத்தகங்களை விற்றார். பின் நண்பர்கள் கொடுத்த ஊக்கமும், மனைவி கொடுத்த நகை என்னும் முதலீடும், புத்தகத்தின் மீது தான் கொண்ட காதலும் திரு. எஸ்.வைரவன் அவர்களை இன்று ஒரு புகழ்பெற்ற பதிப்பாளராக மாற்றியது.

அந்தப்பெருமகனாரிடம், "நாம் நகரத்தார்" மின்னிதழ் சார்பாக,நடத்திய நேர்காணலில், நான் முன் வைத்த சில வினாக்களும், அதற்கு அவர் அளித்த பதிலும் இதோ உங்களுக்காக படித்து பயன் பெறுங்கள். அந்தப் பண்பாளரைப்பற்றி அறிந்து கொள்ளுங்கள்!

- **தங்கள் தாய் தந்தையர் மற்றும் குடும்பம் பற்றிச் சொல்லுங்களேன்?**

தேவகோட்டையில் சின்ன வடுகன் செட்டியார் மரபில் பிறந்தவர் என் தந்தையார் திரு.சுவாமிநாதன் செட்டியார்.என் தாயார் தேவகோட்டை தெண்ணீர்வயலார் வீட்டில் பிறந்த வள்ளியப்ப செட்டியார் மகள் உண்ணாமலை ஆச்சி. என் தந்தையாரின் வருமானத்தில் தான் எங்கள் குடும்பம் வாழ்ந்தது. எனது தந்தையார் திருமணத்திற்கு முன்பு, தேவகோட்டை கத்திரிக்காய் பெத்த பெருமாள் செட்டியார் வீட்டுக்கடை ரங்கூனில் இருந்தது.

அந்தக்கடைக்குப் பெட்டியடிப்பையனாக வேலைக்குப்போனார்கள். பர்மாவில் இருந்து தாயகம் வந்தபின்னர், தந்தையார் எங்கள் வீட்டிலேயே காஞ்சிபுரம், பனாரஸ் ஆகிய ஊர்களில் இருந்து பட்டுச் சேலைகள் வாங்கி வந்து விற்பனை செய்தார்கள். அதன் பின்பு அரசாங்க அனுமதியோடு ரேஷன் கடையை நடத்தினார்கள். வருமானம் என்பது ஓரளவுதான்வந்தது. அதைக்கொண்டுதான் என் தந்தையார் குடும்பத்தை நடத்தி வந்தார்கள்.எங்கள் தாய் தந்தையருக்கு நாங்கள் ஆறுபேர் குழந்தைகள். நான் 27-12-1946 ஆம் ஆண்டு கடைக்குட்டியாகப்பிறந்தேன்

- **அண்ணே உங்களது ஆரம்பக்கல்வி குறித்துச் சற்று கூற முடியுமா?**

எனக்கு எட்டு வயது தொடங்கியபோது,என் தந்தையார் இறந்து விட்டார்கள். எங்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை என் தாயார் உண்ணாமலை ஆச்சிக்கும்,எனது மூத்த அண்ணன் சிவராமனுக்கும் இருந்தது. நான் தேவகோட்டை நகரத்தார் மேல்நிலைப்பள்ளியில் S . S . L . C வரை படித்தேன். அதன்பின் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் P.U.C. ஒரு ஆண்டு படித்தேன். அதன்பின் குடும்பச் சூழ்நிலை காரணமாக மேற்கொண்டு படிக்க இயலாமல் பட்டப்படிப்பில் சேர முடியவில்லை.

- **நீங்கள் முதல் முதலாக வேலைக்குச் சேர்ந்த அனுபவத்தை பகிர முடியுமா?**

குடும்பத்தின் நிலைகருதி எதாவது ஒரு வேலையில் சேர்ந்து தாயையும்,உடன் பிறந்தோரையும் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு சென்னைக்குப்புறப்பட்டேன்.என்னுடைய ஆச்சி சரஸ்வதியின் கணவர் முருகப்ப செட்டியார், சென்னை பாண்டிபஜாரில், புவனா காப்பி ஹவுஸ் என்ற பெயரில் கடை ஒன்றை நடத்திவந்தார்.

1967ஆம் ஆண்டு, அந்தக்கடையில் என்னை வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். ஆதரவு எதுவுமற்ற நிலையில் எனக்கு வேலை கொடுத்து ஆதரவு அளித்த அயித்தான் முருகப்ப செட்டியாரை என்னால் ஒரு நாளும் மறக்க முடியாது. 1971 ஆம் ஆண்டுவரை அங்கு வேலை பார்த்த நான்,அதன்பின் நாச்சியாபுரம் ராஜேந்திரன் செட்டியார் அவர்கள் சென்னை கோடம்பாக்கத்தில் நடத்தி வந்த தேவி ஸ்டோரில் வேலைக்குச்சேர்ந்தேன்.

இந்தக்கடையில் ஸ்டேஷனரி பொருட்களோடு பாடப்புத்தகங்களும் விற்று வந்தார்கள்.திரு. ராஜேந்திரன் அவர்கள் சிங்கப்பூரில் வாழ்ந்தார்கள். அவர்களது மனைவி பொன்னழகி ஆச்சி. முதலாளிகள் இருவரும் என்மீது அன்புகாட்டி,எனக்கு முழுச்சுதந்திரம் கொடுத்து வேலைபார்க்கச்சொன்னார்கள். நான் இன்றைக்கு இந்த நிலைக்கு வந்துள்ளேன் என்றால் அவர்கள் தந்த ஊக்கம் தான் காரணம். அதன்பின் தேவகோட்டையைச்சார்ந்த அண்ணாமலை செட்டியார் திரைப்படம் எடுக்க, தயாரிப்பாளருக்கு பணம் கடனாக கொடுத்து வந்தார்கள். அவர்கள் கொடுத்த பணத்திற்கு வட்டியும் அசலும் வசூலிக்கும் வேலையை என்னிடம்ஒப்படைத்தார்கள்.

அப்படி வசூல் செய்யச் சென்ற நான், சில திரைப்படங்களுக்கு
தயாரிப்பு நிர்வாகியாக 1976 முதல் 1979 வரை பணியாற்றினேன்.

- **தங்களுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது?**

எனக்கு 1974 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. என் மனைவி நாச்சம்மை எனது மூத்த ஆச்சி பெரிய சிட்டாள் ஆச்சி மகள். எனது அயித்தான் தேவகோட்டை ஆத.வெ.நாச்சியப்ப செட்டியார். இவர்கள் என் திருமணத்தின் போது கும்பகோணத்தில் தொழில் நடத்தி வந்தார்கள்.



எனக்கு ஒரு சுவீகாரப்புத்திரன். அவர் பெயர் சுவாமிநாதன். அவருக்கு எனது மூத்த அண்ணன் சிவராமன் அவர்களின் மகள் வழிப்பேத்தி உமா ராஜேஸ்வரியைத் திருமணம் செய்து வைத்தேன்.எனது மகன் திரு.சுவாமிநாதன் அவர்கள் குமரன் பதிப்பகத்தின் வளர்ச்சியில், என்னுடன் துணைநின்று பணியாற்றி வருகிறார்கள். அவரது சிந்தனைகள் மூலம் நான் இளைய சமுதாயத்தினரின் விருப்பத்தை அறிந்து கொள்கிறேன். இளைஞர்களின் தேவையறிந்து பல தலைப்புகளில் சுய முன்னேற்ற நூல்களைப் பதிப்பித்துள்ளேன். எனது மகன் வழிப்பேத்தியாக, அழகும் அறிவும் மிக்க ஒருத்தி பிறந்துள்ளாள். அவளுக்கு என் தாயார் பெயரான உண்ணாமலை என்று பெயரிட்டு மகிழ்ந்தேன். தற்சமயம் பேத்தி உண்ணாமலை ஈரோட்டில் B.Sc படிக்கிறாள்.

▪ **பதிப்பகம் தொடங்க வேண்டும் என்று ஏன் நினைத்தீர்கள்?**

நானும் என் நண்பர்கள் சிலரும் புத்தகங்களை சைக்கிளில் கட்டிக் கொண்டு சென்னையிலுள்ள பள்ளிகள்,கல்லூரிகளுக்குச் சென்று விற்பனை செய்து வந்தோம். அப்போது எனக்கு இருந்த ஆர்வத்தால் சைக்கிளை மிதித்துக் கொண்டு பல மைல் தூரம் சென்றுவருவது கடினமாகத் தோன்றவில்லை.

பின்னாளில் என் நண்பர்கள் இப்படிச் சைக்கிளிலில் போய் மற்றவர்கள் வெளியிட்ட புத்தகத்தை வியாபாரம் செய்வதைவிட நாமே ஒரு பதிப்பகம் தொடங்கலாமே? என்றனர். குறிப்பாக என்னைப் பதிப்பகம் ஆரம்பிக்க உற்சாகப் படுத்தியது,வசந்தா பிரசுரம் உரிமையாளர் திரு.சுவாமிநாதனும், கவிதா பப்ளிகேஷன் உரிமையாளர் திரு.சொக்கலிங்கமும் தான். இருவரும் எனக்கு நெருங்கிய நண்பர்கள். எங்கள் ஊரைச்சார்ந்த பலரும் பதிப்பகத்தை நடத்தி வந்ததும் எனக்கு ஒரு ஊக்கத்தைத் தந்தது.

எனது மனைவி நாச்சம்மை தான் அணிந்திருந்த நகைகள் அனைத்தையும் கழற்றிக்கொடுத்து பதிப்பகத்தை தொடங்குங்கள் என்று எனக்கு நம்பிக்கையை கொடுத்தாள்.

▪ பதிப்பகத்தை சென்னையில் எங்கே தொடங்கினீர்கள்?

1979ஆம் ஆண்டு நான் குடியிருந்த வீட்டிலேயே குமரன் பதிப்பகத்தை தொடங்கினேன். எனது பதிப்பகத்தின் முதல் வெளியீடாக, அப்போது எழுத்தாளர் சங்கத் தலைவராக பதவி வகித்த திரு.வாசவன் எழுதிய,"தீபா திரும்பி வா!" என்ற நூலை வெளியிட்டேன். வாடகை வீட்டில் இருந்த பதிப்பகத்தை 1983 ஆம் ஆண்டு, தியாகராயநகர் முத்துக்கிருஷ்ணன் தெருவுக்கு மாற்றினேன்.

அப்பொழுது நாங்கள் மற்ற பதிப்பாளர்களின் புத்தகங்களுக்குத் தொகை எதுவும் கொடுக்காமல், அதற்கு மாற்றாக நான் வெளியிட்ட புத்தகங்களை கொடுத்து,பண்டமாற்று முறையில் வாங்கித்தான் விற்றோம். அப்போது இருந்த பதிப்பாளர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதை ஒரு குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். அதன்பின் 2006 முதல் தியாகராயநகர் கண்ணதாசன் சாலையில் குமரன் பதிப்பகம் இயங்கி வருகிறது.

## ▪ இதுவரை எவ்வளவு புத்தகங்கள் வெளியிட்டு உள்ளீர்கள்?



இதுவரை நான் 1000க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டுள்ளேன். முக்கியமான எழுத்தாளர்கள் பலரும் எனக்கு அவர்களின் படைப்பை வழங்கி புத்தகமாக வெளியிட உதவினார்கள். வாழ்வியல் ஆசிரியர் மெர்வின், கவிவேந்தர் மு.மேத்தா, பேராசிரியர் நெல்லை கவிநேசன், காவியக்கவிஞர் வாலி,டாக்டர் விக்கிரமன், கவிஞர் முத்துலிங்கம், கவிஞர் பழனி பாரதி,சிந்தனைக் கவிஞர் கவிதாசன், வித்தகக்கவிஞர் பா.விஜய், கவிஞர் கே.ஜீவபாரதி, கவிஞர் தாமரை, பேராசிரியர் க.இராமச்சந்திரன், திருநாவுக்கரசு ஐ.பி.எஸ், முனைவர் சுந்தர ஆவுடையப்பன்,முன்னாள் வானொலி இயக்குநர் ஜெ.கமலநாதன், புலவர் கருப்பூர் அண்ணாமலை, குழந்தை எழுத்தாளர் தி.மங்கையர்க்கரசி ஆகியோரின் நூல்கள் பல பதிப்புகளாக வெளி வந்து மக்களின் பாராட்டைப் பெற்றுள்ளது. பல்வேறு பரிசுகளும் அவற்றுக்கு கிடைத்துள்ளன.

- **நீங்கள் வெளியிட்ட புத்தகங்களுக்கு பரிசு கொடுத்த நிறுவனங்களும்,உங்கள் பதிப்பகத்தைப் பாராட்டிய நிறுவனங்களும் எவை? எவை என்று கூறமுடியுமா?**

பதிப்பகம் என்றாலே அதன் உரிமையாளருக்குத் தான் வெளியிட்ட புத்தகங்களுக்குப் பரிசு கிடைத்தால், புத்தகத்தை எழுதிய எழுத்தாளரை விட அதிக மகிழ்ச்சி அடைவது பதிப்பாளர்களே! மேலும் எங்கள் பதிப்பகத்தை பல நிறுவனங்களும் பாராட்டி உள்ளன. அது தான் எங்களை மீண்டும் மீண்டும் உற்சாகமாக இயங்க வைக்கிறது.

எங்கள் பதிப்பகத்தின் புத்தகங்களுக்கு பரிசளித்து பாராட்டியோர்: சாகித்ய அகாடமி விருது, தமிழ்நாடு அரசு விருது ,ஆதித்தனார் விருது, பாரத வங்கி விருது, செங்கமலத்தாயார் விருது,திருப்பூர் தமிழ்ச்சங்கம் விருது, சிற்பி அறக்கட்டளை விருது, யாழ் பவுண்டேசன் கவிதை உறவு விருது



எங்கள் பதிப்பகத்தை பாராட்டி விருது வழங்கியோர்:

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், விருத்தாசலம் இலக்கியப் பேரவை தேவகோட்டை கேஎம்எஸ் அறக்கட்டளை, சென்னை பசும்பொன் பைன் ஆர்டஸ் திருச்சி ரோட்டரி கிளப்

- **பதிப்புத்துறை நீங்கள் அன்று நினைத்தது போல லாபம் ஈட்டக்கூடிய தொழிலா?**

எந்தத்தொழிலாக இருந்தாலும் நேர்மையாகச் செயல்பட்டால் லாபம் வரக்கூடிய தொழில்தான். இன்றைக்கு பதிப்பகத் தொழிலுக்கு பலரும் வந்துவிட்ட காரணத்தால் போட்டி அதிகமாகி விட்டதாலும், புத்தகத்தை விலை கொடுத்து வாங்கிப்படிக்கும் வாசகர்கள் குறைந்து விட்டதாலும் லாபம் குறைவானதொழிலாக பதிப்பகத்தொழில் உள்ளது.

அது மட்டுமல்லாது, இன்றைக்குப் புத்தகங்கள் பலவும், E–BOOK வடிவத்தில் கிடைப்பதால் இளைஞர்கள் அதை நாடிச்செல்கிறார்கள். புத்தகங்கள் பலவற்றையும் MOBILE மற்றும் LABTOP மூலமாக பதிவிறக்கம் செய்வதாலும் புத்தக விற்பனை குறைகிறது. மேலும் அதிகப்பிரதிகள் விற்ற புத்தகங்களை,சில விஷமிகள், அப்படியே காப்பி செய்து குறைந்த விலைக்கு விற்பதாலும் பதிப்பகங்களின் லாபம் பெரியளவில் குறைகிறது.

- **நீங்கள் பப்பாசியில் தலைவராகப் பணியாற்றிய போது செய்த பணிகள் பற்றி கூறுங்களே?**



நான் பப்பாசி என்கின்ற தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றினேன். 2002–2005 மற்றும் 2010–2011 ஆகிய ஆண்டுகளில் அதன் செயற்குழு உறுப்பினராக இருந்தேன். பின் 2006–2007 ஆம் ஆண்டில் அதன் பொருளாளராக பதவி வகித்தேன். பின் 2012–2013 ஆண்டு அதன் செயலாளராக தேர்வு செய்யப்பட்டேன். பின் தேர்தல் மூலமாக 2018–2019 மற்றும் 2022–2023 ஆண்டுகளில் அதன் தலைவராகத் தேர்வாகி வெற்றி பெற்றேன். நான் தலைவராக இருந்த பொழுதுதான் முதல் முதலால, வெளிநாடான துபாயின் சார்ஜாவில் புத்தக்கண்காட்சி நடத்தினோம். அதன் பின் தமிழக அரசின் ஆதரவோடு,சென்னையில் மட்டும் நடந்து வந்த புத்தக் கண்காட்சியை, தமிழகத்தின் முக்கியமான நகரங்கள் தோறும் நடத்தத் தொடங்கினோம்.

- **பதிப்பாளராகிய நீங்கள்"எழுத்தாளர்களை போற்றும் மனிதர்" என்று உங்களைப்பலர் பாராட்டி யுள்ளார்கள்.அதன் ரகசியம் என்ன?**




நீங்கள் சொல்வது போல அதில் எதுவும் ரகசியம் ஒன்றுமில்லை. எழுத்தாளர்கள் பதிப்பாளர்களாகிய எங்களை நம்பி, அவர்களது படைப்புகளைத் தருகிறார்கள்.


அவர்களது புத்தகங்கள் மக்களால் அதிகம் வரவேற்கப்பட்டு வாங்கி வாசிக்கப் படுமானால், எங்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும். எங்களுக்குக் கிடைத்த வருமானத்தில் ஒரளவு தொகையை எழுத்தாளர்களுக்கு மதிப்பு ஊதியமாக நேர்மையாக நான் வழங்கிவிடுவேன். எழுத்தாளர்களில் சிலரைத் தவிர, பல எழுத்தாளர்கள் தங்கள் எழுத்தை மட்டுமே நம்பி வாழ்கிறார்கள். அவர்களை பதிப்பாளர்களாகிய நாங்கள் என்றைக்கும் போற்ற வேண்டும். நாங்களும் அவர்களும் நன்கு வாழ்ந்தால்தான் பதிப்புலகமும், எழுத்துலகமும் சிறப்பாகத் திகழும் என்பது என் நம்பிக்கை அதனால் தான் நான் என்றைக்கும் எழுத்தாளர்களைப் போற்றி வருகிறேன்.


- **தாங்கள் ஆற்றிவரும் பொதுப்பணி மற்றும் ஆன்மிகப்பணிகள் பற்றி கூற முடியுமா?**



நான் ஒன்றும் நீங்கள் கேட்பது போல பொதுப்பணிகள் அல்லது ஆன்மிகப்பணிகள் போன்றவற்றில் நாட்டம் இருந்தாலும், நான் செய்த பணிகளை வெளிச்சம் போட்டுக்காட்ட விரும்பாதவன். நான் பதிப்பாளராக இருப்பதால், பல ஊர்களில் நூலகம் அமைப்பதற்கு என்னிடம் வந்து உதவி கேட்பார்கள். அதற்கு நான் பல உதவிகளைச் செய்து கொடுத்துள்ளேன்.

சில நூலகங்களுக்கு எங்கள் பதிப்பகப்புத்தகங்களை நன்கொடையாக கொடுத்துள்ளேன். திருச்செந்தூர், தேவகோட்டை போன்ற ஊர்களிலுள்ள நகரத்தார் விடுதிகளில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்திற்கு புத்தகங்கள் வழங்கியுள்ளேன்.




ஆன்மிகப்பணியாற்ற என்னை நம்பி வழங்கிய பொறுப்பை ஏற்றுக் கொண்டு,அனைவரது ஒத்துழைப்போடு பணியாற்றியுள்ளேன். குறிப்பாக தேவகோட்டை நகரச்சிவன் கோவில் குடமுழுக்கு விழா 2018 ஆம் ஆண்டு நடைபெற்றது. அந்த குடமுழுக்குவிழா மலர்க்குழுத்தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்தப் பொறுப்பை ஏற்று மிகச்சிறப்பாக, பெரிய அளவில் குடமுழுக்கு விழா மலரினை வெளியிட்டு, ஊர்மக்கள் போற்றும்படி பணி செய்தேன்.





2024ஆம் ஆண்டு எங்களின் குலதெய்வம் திருப்பத்தூர் கோட்டைக்கருப்பர் கோவிலின் திருப்பணிக் குழுவின் தலைவராக செயல்பட்டு,தமிழ்நாடே போற்றும் வண்ணம் குடமுழுக்கு விழாவினை நடத்தினோம்.

கோட்டைக்கருப்பர் அருளால் இன்றைக்கு அந்தக்கோவிலின் "அறங்காவலராக"அரசாங்கத்தால் நியமிக்கப் பட்டுள்ளேன்.

இரண்டுமணி நேரம் ஒரு இனியவரோடு பேசிக்கொண்டிருந்த நேரத்தில், அந்த மாமனிதரின் வெற்றி ஏதோ எளிதாகப்பெற்றது அல்ல என்பதை உணர்ந்து கொண்டேன். எளிமையும் நேர்மையும், ஒழுக்கமும், நன்றிமறவாத்தன்மையும், தன்னை உயர்த்தியோரை போற்றும் பண்பும் கொண்டவராய் ஒருவர் திகழ்ந்தால் அவரது வெற்றியை யாராலும் தடுத்த நிறுத்த முடியாது என்பதற்கு எடுத்துக் காட்டாய்த்திகழும், குமரன் பதிப்பகத்தின் உரிமையாளர் திரு.எஸ்.வைரவன் அவர்களை வணங்கி, விடைபெற முடியாமல் விடைபெற்றேன்.

# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.**

**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This Month Class will be On
March 18th and 19th 2025

**Webinar Timings** India Time: in 15.00 Hrs to 16.00 hrs India Time.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு நிறுவனம் குறித்த பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

SUPRIYA LIFESCIENCE LTD.

## இந்நிறுவனத்தைப் பற்றி:

## SUPRIYA LIFESCIENCES LIMITED (SUPRIYA)

இந்தியாவின் மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டு 1987 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பொதுப் பட்டியலிடப்பட்ட பொதுவான மருந்து நிறுவனமாகும். இந்தியாவின் மகாராஷ்டிராவில் உள்ள லோட்டே, இந்தியாவின் API வசதி பல மடங்கு USFDA, EDQM/EUGMP அங்கீகரிக்கப்பட்டது, மேலும் ஹெல்த் கனடா அங்கீகரிக்கப்பட்டது, அதேசமயம் இந்தியாவின் மும்பை, அம்பர்நாத்தில் அமைந்துள்ள ஃபார்முலேஷன் வசதி EUGMP இணங்கியுள்ளது.

சுப்ரியா லைஃப் சயின்சஸ் லிமிடெட்
நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர். சதீஷ் வாமன் வாக், மருந்துத் துறையில் 36 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்டவர். அவரது தலைமையின் கீழ், நிறுவனம் உலகின் மிகப்பெரிய API உற்பத்தியாளர்களில் ஒன்றாக மாறியுள்ளது.

சுப்ரியா லைஃப் சயின்சஸ் லிமிடெட் API உற்பத்தியில் நன்கு நிறுவப்பட்ட இருப்பைக் கொண்டுள்ளது – ஆன்டி–ஹிஸ்டமைன், ஆன்டி–அலெர்ஜிக்ஸ், வைட்டமின்கள், மயக்க மருந்துகள், ஆஸ்துமா எதிர்ப்பு போன்ற பல்வேறு சிகிச்சைப் பிரிவுகளின் தயாரிப்புகளில் கவனம் செலுத்துகிறது.

நிறுவனத்தின் வசதி 47,000 சதுர மீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது. கிடங்கு, QA, QC, R & D, உற்பத்தி மற்றும் முடிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு (வெவ்வேறு சிகிச்சை பிரிவுகளுக்கான பிரத்யேக தொகுதிகள்) வரையறுக்கப்பட்ட பகுதிகளுடன் ஆலையின் தற்போதைய திறன் 550 KL மற்றும் முடிக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு பல சுத்தமான அறைகளுடன் துணைபுரிகிறது.

அவர்களின் திறன் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 2024க்குள் அவற்றின் திறன் தோராயமாக 1000+ KL ஆக இருக்கும்.

வலுவான R&D, 14 செயலில் உள்ள USDMFகள், 8 செயலில் உள்ள CEPகள் & உலகளாவிய இணக்க வசதிகள் (EMA, US FDA, WHO, PMDA, TGA, KFDA, ANVISA) மூலம் நிறுவனம் ஆதரிக்கப்படுகிறது.

முக்கிய வணிகம் நெறிமுறை மதிப்புகள் மற்றும் EHS தரங்களால் இயக்கப்படுகிறது. Innovators, Generic நிறுவனங்கள் ஆகிய இரண்டிற்கும் APIகள் மற்றும் இடைநிலைகளை உருவாக்குவதே நிறுவனத்தின் கவனம்.

சுப்ரியா லைஃப் சயின்ஸ் லிமிடெட், 86 நாடுகளில் பரவியுள்ள உலகளாவிய தடம் பெற்றுள்ளது. அவர்களின் பலதரப்பட்ட ஆக்டிவ் பார்மாசூட்டிகல் இன்க்ரீடியன்ஸில் 38 க்கும் மேற்பட்ட தயாரிப்புகள் உள்ளன, அவை நம்பகமான உலகளாவிய வாடிக்கையாளர்களின் மறைமுகமான நம்பிக்கையை அனுபவிக்கின்றன.

நிறுவனம் மிகவும் கோரும் தரத் தரங்களைச் சந்திக்கிறது மற்றும் 35 நாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சுப்ரியா 1200+ வாடிக்கையாளர்கள் மற்றும் 86 க்கும் மேற்பட்ட நாடுகளில் முன்னிலையில் உள்ளார். இது இந்தியாவில் இருந்து குளோர்பெனிராமைன், மாலேட், கெட்டமைன் ஹைட்ரோ குளோரைடு மற்றும் சல்பூட்டமால் சல்பேட் ஆகியவற்றின் மிகப் பெரிய ஏற்றுமதியாளர் ஆகும். அடுத்த 2–3 ஆண்டுகளில் அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் லத்தீன் அமெரிக்க வணிகத்தில் வலுவான வளர்ச்சிக்கு நிர்வாகம் வழிகாட்டியுள்ளது.

இந்நிறுவனம் அதன் வகையிலான நாவல் வாய்வழி புற்றுநோயைக் கண்டறியும் கருவியான Quickblue மற்றும் GelHeal என்ற காயம் குணப்படுத்தும் ஜெல் ஆகியவற்றை உருவாக்குவதற்காக கலிங்கா இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியுடன் இரண்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

சுப்ரியா ஏற்கனவே உள்ள தயாரிப்புகள், புதிய தயாரிப்பு வெளியீடுகள் மற்றும் CMO/CDMO வாய்ப்புகளுக்கான மேலும் பின்தங்கிய ஒருங்கிணைப்புக்கான திறன் மேம்பாட்டை மேற் கொண்டார்.

அம்பர்நாத்தில் பைலட் ஆலையுடன் கூடிய புதிய R&D வசதியுடன் 7 0 K L திறன் கொண்ட புதிய உற்பத்தித் தொகுதியும் அமைக்கப்படுகிறது. இந்த திட்டங்களின் மூலம் மொத்த கொள்ளளவு 597 KLலிருந்து 900 KL ஆக அதிகரிக்கும்.

CDMO பிரிவில், நிறுவனம் பெரிய அளவிலான சிறப்பு இரசாயன உற்பத்தியைப் புரிந்துகொள்கிறது மற்றும் அபாயகரமான சிக்கலான செயல்முறை வேதியியலைக் கையாள்வதில் அனுபவம் பெற்றுள்ளது. பெரிய பார்மா முதல் புதுமைகண்டுபிடிப்பு நிறுவனங்கள் வரை பல்வேறு நிறுவனங்களுடன் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப தயாரிப்புகளை வழங்குவதற்கு பங்குதாரராக பணியாற்ற இது தொடங்கியுள்ளது. சுப்ரியா ஒரு முன்னணி ஐரோப்பிய நிறுவனத்துடன் ஒரு முக்கிய CMO திட்டத்தில் ஒன்றை அறிவித்துள்ளார், அங்கு சுப்ரியா பிரத்யேக API சப்ளையர் ஆவார்.

இந்த ஒப்பந்தம் 10 வருட காலப்பகுதியாகும் மற்றும் FY27 முதல் ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் உச்ச வருவாயை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், நிறுவனம் API மற்றும் மேம்பட்ட இடைநிலை இடைவெளியில் இரண்டு ஒத்த வாய்ப்புகளை அடையாளம் கண்டுள்ளது, மேலும் பல சாத்தியமான வாய்ப்புகளுடன்.

சமீபத்தில், எஸ்கெட்டமைன் ஹைட்ரோகுளோரைடு அனுமதி மற்றும் அட்டோர்வாஸ்டாடின் காப்புரிமை தாக்கல் மூலம் சுப்ரியா லைஃப் சயின்சஸ் உலகளாவிய தடயத்தை விரிவுபடுத்தியது. சுப்ரியா லைஃப் சயின்சஸ் நிறுவனம் அங்கீகாரம் பெற்ற முதல் இந்திய நிறுவனமாகும்.

பிரேசிலின் சுகாதார ஆணையமான A N V I S A இலிருந்து எஸ்கெட்டமைன் ஹைட்ரோகுளோரைடு. சுப்ரியா லைஃப் சயின்சஸ் குறைந்த விலையில் அட்டோர்வாஸ்டாடின் தயாரிப்பதற்கான புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது, இது கொழுப்பைக் கட்டுப்படுத்துவதற்கும் இருதய நோய்களைத் தடுப்பதற்கும் ஒரு முக்கிய சிகிச்சையாக உலகளவில் பயன்படுத்தப்படுகிறது.

சுப்ரியாவின் உற்பத்தித் திறன்கள் எளிய மூலக்கூறுகளின் வளர்ச்சியிலிருந்து பல்வேறு வகையான எதிர்வினைகளில் நிபுணத்துவம் பெற்ற மிகவும் சிக்கலான மூலக்கூறுகள் வரை உள்ளன.

வினியோகச் சங்கிலி செயல்முறையின் (இடைநிலைகள்) மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதற்காக அதன் API தயாரிப்புகளுக்கான பின்தங்கிய ஒருங்கிணைப்பை அது செயல்படுத்தியுள்ளது.

15 தயாரிப்புகள் பின்தங்கிய ஒருங்கிணைக்கப்பட்டவை, இது பெரும்பாலும் அதன் மொத்த வருவாயில் 72% பங்களிப்பை வழங்கியது மற்றும் நடுத்தர காலத்தில் மேலும் பின்தங்கிய தயாரிப்புகளை ஒருங்கிணைக்கும் செயல்பாட்டில் உள்ளது.

இது நிறுவனத்திற்கு நிலையான வணிகம் மற்றும் வெளிப்புற ஆதாரங்களைச் சார்ந்திருப்பதைக் குறைக்க உதவுகிறது. இது அதன் முக்கிய பலங்களில் ஒன்றாக செயல்படும் அத்தியாவசிய மூலப்பொருட்களின் தர சோதனை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

நிறுவனம் லத்தீன் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தற்போதுள்ள புவியியல் பகுதிகளில் தற்போதுள்ள தயாரிப்புகளின் நிலையான வளர்ச்சி மற்றும் புதிய வெளியீடுகளால் தொடர்ந்து விற்பனையை அதிகரிக்கும்.

சுப்ரியா லைஃப் சயின்சஸ் உலகம் முழுவதும் பலதரப்பட்ட வாடிக்கையாளர் தளத்தைக் கொண்டுள்ளது. அவர்களின் நன்கு அறியப்பட்ட வாடிக்கையாளர்களில் சில உலகளாவிய மருந்து நிறுவனங்களும் அடங்கும்:-

**Syntec Do Brasil LTDA**
**American International Chemical Inc**
**AT Planejamento E Desenvolvimento De Negocios Ltda**
**Suan Farma Inc**
**Acme Generics LLP**
**Akum Drugs Ltd**
**Mankind Pharma Ltd**

இந்த நிறுவனங்கள் பல ஆண்டுகளாக சுப்ரியா லைஃப் சயின்சஸ் நிறுவனத்துடன் தொடர்புடையவை, சில உறவுகள் ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளன.

நிறுவனத்தின் உலகளாவிய தடம் 86 நாடுகளில் பரவியுள்ளது, 286 விநியோகஸ்தர்கள் உட்பட 1,060 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது.

தற்போது நிறுவனம் 40+ தயாரிப்புகளைக் கொண்டுள்ளது, 86+ நாடுகளில் சப்ளை செய்கிறது, 1500+ வாடிக்கையாளர்கள் மற்றும் 400+ பணியாளர்களைக் கொண்டுள்ளது.

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>**27.55** | EPS - TTM (₹)<br>**21.68** |
| MCap (₹ Cr.)<br>**4,808.04** | Sectoral MCap Rank<br>**48** |
| PB Ratio (x)<br>**6.19** | Div Yield (%)<br>**0.00** |
| Face Value (₹)<br>**2.00** | Beta<br>- |
| VWAP (₹)<br>**600.84** | 52W H/L (₹)<br>**835.20 / 305.50** |

**Supriya Lifescience Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | -4.68% |
| 1 Week | -6.63% |
| 1 Month | -4.36% |
| 3 Months | -21.12% |
| 1 Year | 75.14% |
| 3 Years | 42.19% |
| 5 Years | N.A. |

இண்டஸ்ட்ரி PE 42.25 உடன் ஒப்பிடுகையில், 27.55 (2024-09 இல் முடிவடையும் பன்னிரெண்டு மாதங்கள்) ஸ்டாண்டலோன் இபிஎஸ் கொண்ட நிறுவன 21.68 ரூபாய் 2 முகமதிப்பு கொண்ட நிறுவனம்.

சமீபத்திய தரவுகளின்படி நிறுவன ஊக்குவிப்பவர் 68.30% வைத்திருக்கிறார். நிறுவனம் கடனைக் குறைத்துள்ளது. நிறுவனம் கிட்டத்தட்ட கடன் இல்லா நிறுவனம். நிறுவன ஈக்விட்டியில் (ROE) நல்ல வருமானத்தைப் பெற்றுள்ளது, 3 ஆண்டுகள் ROE 17.3%.

## Contingent Liabilities Coverage

**Company has sufficient cash reserves to pay off its contingent liabilities. (Source: Standalone Financials)**

## Beating 3 Yr Revenue CAGR

**Company's annual revenue growth of 23.51% outperformed its 3 year CAGR of 13.46%. (Source: Standalone Financials)**

## All Debts Paid-off

**Company has become debt free for the first time since last 5 years. (Source: Standalone Financials)**

## Employee & Interest Expense

**Company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 11.86% towards employee cost in the year ending Mar 31, 2024. (Source: Standalone Financials)**

## Supriya Lifescience Share Price Update

**Supriya Lifescience Ltd. share price moved down by -4.68% from its previous close of Rs 626.70. Supriya Lifescience Ltd. stock last traded price is 597.40**

## Profit & Loss

| QUARTERLY \| ANNUAL | DEC 2024 | SEP 2024 | JUN 2024 | MAR 2024 | DEC 2023 |
|---|---|---|---|---|---|
| Total Income | 187.75 | 168.62 | 162.85 | 160.37 | 143.14 |
| Total Income Growth (%) | ↑11.34 | ↑3.54 | ↑1.55 | ↑12.03 | ↑0.40 |
| Total Expenses | 124.66 | 106.13 | 102.74 | 106.59 | 102.55 |
| Total Expenses Growth (%) | ↑17.46 | ↑3.30 | ↓-3.61 | ↑3.94 | ↓-8.71 |
| EBIT | 63.09 | 62.49 | 60.11 | 53.78 | 40.59 |
| EBIT Growth (%) | ↑0.95 | ↑3.96 | ↑11.78 | ↑32.48 | ↑34.24 |
| Profit after Tax (PAT) | 46.78 | 46.15 | 44.64 | 36.93 | 29.79 |
| PAT Growth (%) | ↑1.37 | ↑3.37 | ↑20.88 | ↑23.99 | ↑24.72 |
| EBIT Margin (%) | 33.60 | 37.06 | 36.91 | 33.53 | 28.36 |
| Net Profit Margin (%) | 24.92 | 27.37 | 27.41 | 23.03 | 20.81 |
| Basic EPS (₹) | 5.82 | 5.71 | 5.54 | 4.59 | 3.70 |

### Beating 3 Yr Revenue CAGR

**Company's annual revenue growth of 23.51% outperformed its 3 year CAGR of 13.46%.**

### Employee & Interest Expense

**Company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 11.86% towards employee cost in the year ending Mar 31, 2024.**

## Balance Sheet

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 921.24 | 820.28 | 734.76 | 445.47 | 335.22 |
| Total Assets Growth (%) | ↑12.31 | ↑11.64 | ↑64.94 | ↑32.89 | ↑33.45 |
| Total Liabilities | 105.87 | 120.82 | 119.07 | 176.88 | 185.33 |
| Total Liabilities Growth (%) | ↓-12.37 | ↑1.47 | ↓-32.68 | ↓-4.56 | ↑19.88 |
| Total Equity | 815.37 | 699.46 | 615.69 | 268.58 | 149.89 |
| Total Equity Growth (%) | ↑16.57 | ↑13.61 | ↑129.24 | ↑79.18 | ↑55.18 |
| Current Ratio (x) | 5.17 | 4.85 | 4.99 | 1.82 | 1.28 |
| Total Debt to Equity (x) | 0.00 | 0.02 | 0.03 | 0.25 | 0.56 |
| Contingent Liabilities | 3.46 | 5.62 | 5.62 | 1.57 | - |

## Contingent Liabilities Coverage

**Company has sufficient cash reserves to pay off its contingent liabilities.**

## All Debts Paid-off

**Company has become debt free for the first time since the last 5 years.**

### Cashflow

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 113.31 | 66.19 | 48.80 | 78.91 | 116.67 |
| Net Cash used in Investing Activities | -173.58 | -133.15 | -59.82 | -46.80 | -40.60 |
| Net Cash flow from Financing Activities | -22.36 | -3.37 | 149.65 | -14.52 | -13.76 |
| Net Cash Flow | -82.63 | -70.33 | 138.63 | 17.59 | 62.31 |
| Closing Cash & Cash Equivalent | 74.96 | 157.58 | 227.91 | 92.29 | 74.70 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↓-52.43 | ↓-30.86 | ↑146.94 | ↑23.54 | ↑502.57 |
| Total Debt/ CFO (x) | 0.00 | 0.25 | 0.44 | 0.85 | 0.70 |

## Increase in Cash from Investing

**Company has used Rs 173.57 cr for investing activities which is a YoY increase of 30.37%.**

### Ratio

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 14.60 | 12.84 | 24.65 | 46.01 | 48.83 |
| Return on Capital Employed (%) | 19.87 | 17.47 | 33.29 | 57.23 | 56.65 |
| Return on Assets (%) | 12.92 | 10.95 | 20.66 | 27.74 | 21.52 |
| Interest Coverage Ratio (x) | 87.02 | 44.87 | 52.78 | 42.00 | 16.79 |
| Asset Turnover Ratio (x) | 0.66 | 0.59 | 0.90 | 86.50 | 92.96 |
| Price to Earnings (x) | 22.42 | 17.09 | 26.18 | - | - |
| Price to Book (x) | 3.27 | 2.19 | 6.44 | - | - |
| EV/EBITDA (x) | 14.13 | 10.07 | 16.97 | - | - |
| EBITDA Margin (%) | 32.19 | 30.02 | 41.80 | 46.22 | 34.95 |





## மேம்பட்ட விளக்கப்படம்:




## சகநிறுவன ஒப்பீடு:

## Stocks Performance.




## Ratio Performance

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| Supriya Lifescience | 27.55 | 5.90 | 14.60 | 12.92 | 13.46 | 29.41 |
| Aarti Pharmalabs × | 26.65 | 3.78 | 12.34 | 8.40 | 0.00 | 17.14 |
| FDC Ltd × | 22.66 | 2.96 | 14.55 | 12.36 | 12.52 | 20.60 |
| Shilpa Medicare × | 67.58 | 3.31 | 1.76 | 1.03 | 7.51 | 12.57 |
| Strides Shasun × | 21.18 | 2.76 | -3.32 | -1.20 | 6.63 | 13.87 |

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:


## QOQ:




*Showing Supriya Lifescience Shareholding as on Dec 2024*

| CATEGORY | DEC 2024 | SEP 2024 | JUN 2024 | MAR 2024 |
|---|---|---|---|---|
| Promoters | 68.30 | 68.30 | 68.30 | 68.30 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 6.52 | 6.02 | 4.95 | 5.37 |
| DII | 4.93 | 5.45 | 5.47 | 5.30 |
| Mutual Funds | 0.67 | 0.62 | 0.13 | 0.05 |
| Others | 20.25 | 20.23 | 21.28 | 21.03 |

## ShareHoldings:




*Showing Shareholding as on Dec 2024*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 5,49,67,825 | 68.30 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 52,48,803 | 6.52 % | ↑0.49 |
| DII | 39,61,484 | 4.93 % | ↓-0.52 |
| MF | 5,35,615 | 0.67 % | ↑0.05 |
| Others | 1,63,04,688 | 20.25 % | ↑0.01 |

**Promoter holding has not changed in last 9 months and holds 68.3 stake as on 31 Dec 2024**

**Domestic Institutional Investors holding have gone down from 5.3 (31 Mar 2024) to 4.93 (31 Dec 2024)**

**Foreign Institutional Investors holding has gone up from 5.37 (31 Mar 2024) to 6.52 (31 Dec 2024)**

**Other investor holding have gone down from 21.03 (31 Mar 2024) to 20.25 (31 Dec 2024)**

**எமது பரிந்துரை:**

நிறுவனத்தின் அடிப்படை மற்றும் நிதி அளவுருக்கள் ஒட்டு மொத்தமாக மிகவும் வலுவானவை, வலுவான வணிகத்தால் ஆதரிக்கப்படும் நிறுவனம். நிறுவனம் தொடர்ந்து வலுவாகச் செயல்பட்டால், நல்ல வளர்ச்சியைக் காணலாம். தனிப்பட்ட ஆய்வின்படி, நடுத்தர கால (9 முதல் 15 மாதத்தில்) முதல் நீண்ட கால (18 முதல் 36 மாதத்தில்) முதலீட்டிற்கு உகந்தது. நடுத்தர காலத்தில் 1000+ நீண்டகாலத்தில் 1350+ இலக்கை எட்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

**இந்த மாதம் குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள்:**

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, **Godrej Agrovet Ltd...**
**Entry 690. Add More on Down till 580. Target 800 and 1000**

2, **Natco Pharma Ltd...**
**Entry 750. Add More on Down till 600. Target 900 and 1200**

3, **Gail (India) Ltd...**
**Entry 160. Add More on Down till 140. Target 200 and 220**

4, **Aegis Logistics Ltd...**
**Entry 600. Add More on Down till 500. Target 800 and 900.**

5, **Indian Railway Ctrng nd Trsm Corp Ltd...**
**Entry 700. Add More on Down till 600. Target 800 and 900.**

6, **Greaves Cotton Ltd...**
**Entry 220. Add More on Down till 180. Target 260 and**

பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.



# நீங்கள் எப்படி.. மகர லக்னம்..!

-ஜோதிடர் எல்லி
9894176494

நாம் காணும் இந்த பூவுலகம் பிரபஞ்சத்தினுள் அடங்கும் இந்த பிரபஞ்சத்தின் ஒவ்வொரு வினைகளையும் நவ கிரகங்கள் செயல்படுத்துகிறது.



இறைவன் பிரபஞ்சத்தின் உள்ளும் அதற்கு அப்பாலும் இருக்கிறார் பிரபஞ்சம் இறைவனுக்குள் அடங்கும் இறைவன் பிரபஞ்சத்திற்குள் அடங்குவதில்லை என்பதே உண்மை. நம் செயல்களுக்கான கர்மவினைபடி பிறப்பு அமைகிறது அதன்படியே ஜாதகமும் ஏற்படுகிறது.

ஜாதக பாவக ஆய்வு கட்டுரை வரிசையில் இந்த இதழில் மகர லக்னம் பற்றி பார்க்கலாம். மகரம் சோதிட காலசக்கர தத்துவத்தின் 10ம் பாவகம் பஞ்சபூதத்தில் நிலம்! கர்மகாரகன் சனி பகவானின் ஆட்சி வீடு, பெண்ராசி.

மகரம் கும்பம் இரண்டுமே சனி பகவானின் ஆட்சி வீடுகள் என்றாலும் கும்ப லக்னத்திலிருந்து மகரலக்னம் யோக அமைப்பில் சற்று மேம்பட்டது தான்! .இதன் காரணங்களை கும்ப லக்னத்தை பற்றிய பதிவில் தெளிவாக பார்க்கலாம்.



மகரத்திற்கு சனி, சுக்கிரன் இருவரும் முழு யோகர்கள் என்பதை நினைவில் கொள்ளுதல் நன்று!

மகரலக்னகாரர்கள் பொதுவாக கடின உழைப்பாளிகள்! வேலை செய்ய மிகுந்த விருப்பம் உடையவர்களும் கூட!

எதையும் விவரித்து நீண்டு பேசும் சுபாவம் உண்டு ஒரு விசயம் அல்லது சம்பவத்தை குறித்து கேட்டால் திரைக்கதையாக சம்பவங்களை முன்னிறுத்தி பேசிக் கொண்டே போவார்கள்

இவர்கள் பெரும்பாலும் ஆடம்பரமாக தங்களை காட்டி கொள்வதை தவிர்ப்பார்கள். பொது இடங்களில் தங்களை முன்னிலை படுத்தி கொள்ள விரும்புவார்கள். கெட்டபெயர் வாங்கிவிட கூடாது என்பதில் முனைப்பாக செயல்படுவார்கள்.

இவர்களுக்கு சகோதர்கள் வகையில் ஆதரவோ பெரிய ஈடுபாடு அன்னியோன்யமோ இராது அதிலும் குறிப்பாக மூத்த சகோதரரால் நன்மை இல்லை எனலாம். இவர்கள் பிறரின் தவறுகளை புள்ளிவிபரத்துடன் அம்பலபடுத்துவதில் வல்லவர்கள்.

ஆனால் தங்கள் செயல்பாடுகளுக்கு நியாயமான விளக்கம் அளித்து அதனை சரி என நிறுவுவதில் ஈடுபடுவார்கள்.

எந்த ஒரு லக்னமும் முழுமையான அதன் இயல்பு தன்மையை அடைய லக்னாதிபதி சரியாக அமைந்து இருத்தல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

இனி நவக்கிரகங்களின் அமர்வு மகரலக்னத்திற்கு எப்படி செயல்படுகிறது என்பதை பார்ப்போம்

### சனி பகவான்

கர்மகாரகன் சனி லக்னாதிபதி மற்றும் இரண்டாம் பாவாதிபதியாக வருகிறார். பொதுவாக சனி தான் பார்க்கும் இடத்தினை நசிக்க செய்வார் என்பது சோதிட மொழியாயினும் மகரலக்னத்திற்கு அப்படி முழுமையாக எடுக்க இயலாது.

இரண்டில் ஆட்சி பெறுவது ஜாதகர் கருமி யாக இருப்பார், சிலருக்கு குடும்பம் அமைய தாமதமாக ஆகும்.

5ல் அமர்வது ஜாதகருக்கு புத்திர தாமதம் உண்டாக்கினாலும் தன, பொருளாதார விசயத்தில் நல்ல லாபம் உண்டு.

லக்னத்தில் ஆட்சி பெறுவது ஆயுள் தீர்க்கும் உண்டாகும், நாள் முழுவதும் வேலை தொழில் பற்றியே ஓடிக்கொண்டிருப்பார் ஜாதகராங

9ம் இடமான கன்னி யில் அமர்வதும் யோக பலன்கள் உண்டுதான். தந்தை க்கு சிறப்பு இல்லை

7 ல் அமர்வது லக்னாதிபதி திக் பலம் பெற்று லக்னத்தை பார்க்கினும் ஜாதகர் சற்று அதீத மன சஞ்சலம் சிந்தனை களில் குழம்புவார். ஆழ்மன பயம் சமயங்களில் மனதை கவ்வி கொள்ளும் !

இந்த 7ம் பாவக சனி சந்திரனை பார்க்கும் நிலையில் உள்ள ஜாதகர்களுக்கு மேலும் மனகுழப்பத்தை அதிகரிக்கும்

சந்திரன் தசா புத்திகளில் ஜாதகர் மிகவும் மன ரீதியாக பாதிக்கபடுவார், எளிதில் உணர்ச்சி வசப்படும் நபராக இருப்பார்.

10ல் உச்சம் பெற்றாலும் உடனடியாக பெரிய யோகம் என எடுத்து கொள்ள இயலாது. சாரநாதன் மற்றும் சுக்கிரன் நிலையை பொறுத்து தான் பலன்கள் செய்யும்.

6ம் வீடான மிதுனத்தில் சனி அமர்ந்தாலும் இடம் கொடுத்த புதன் 9ம் வீடான கோணத்தில் ஆட்சி பெறுவது யோக அமைப்பாகும்..

**புதன்.**

மகர லக்னத்திற்கு பாக்கியாதிபதி மற்றும் 6க்குடையவர் இவர். லக்னத்தில், இரண்டில் அமரலாம்.

5ம் வீட்டில் அமர்வதும் நன்று,
9ல் ஆட்சி பெற்றாலும் யோகமே
சுக்கிரன் வீடான 10ல் அமர்தலும் சுபமே.

லாபஸ்தானமான 11ல் அமர்ந்தாலும் நற்பலன்கள் உண்டு
4ல் அமர்ந்தால் கடன் சுமை அழுத்தும்,தந்தையார் நிலை கடினம்.

## சூரியன்..

அட்டமாதிபதி சூரியன் பொதுவாக 3ல் மறைதல் நலமே!
11ல் அமரும் போது நல்ல பலன்கள் உண்டு

## சந்திரன்

மாரகாதிபதியாக வந்து பயமுறுத்துகிறார். ஏழாம் ஆதிபத்தியமும் சந்திரனுக்கு கொடுக்க பட்டிருப்பதால் நீசம் பெறாமல் பாவருடன் சேராமல் இருப்பது நலம்.

லக்னத்தில் சந்திரன் நிற்கும் போது ஜாதகருக்கு அதீத எண்ண அலைகளை உண்டு பண்ணும் கணவன் மனைவி ஊடல் மிகுந்து இருந்தாலும் பிரிவு ஏற்படாது. 5ல் உச்சம் பெற்றால் முதலில் பெண் குழந்தை உண்டு. பூர்வீக தொடர்பில் பெற்றோர்கள் ஊரில் மணம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இரண்டில் சந்திரன் இருப்பின் குடும்பத்தில் மனைவி ஆதிக்கம் மிகும், பணவரவு விசயத்தில் தம்பதியர்கள் இடையே கருத்து மோதல்கள் வரலாம்.

## சுக்கிரன்

மகரத்திற்கு 5–10க்குடையவர் மற்றும் யோகாதிபதி ஆவார்

லக்னத்தில் அமர்வது நன்று. 5 மற்றும்10ல் ஆட்சி பெறும் நிலையிலும் யோக பலன்கள் எதிர்பார்க்கலாம்

மகர லக்னகாரரர்கள் களுக்கு சுக்கிரன் சுபமாக அமைந்தால் உரிய வயதில் சீக்கிரத்தில் திருமண பந்தத்திற்கு வழிவகை செய்வார்.

### செவ்வாய்.

மகர லக்னத்திற்கு செவ்வாய் பாதகாதிபதி ஆவார். எனினும் 4,11 என்கிற சுப வீடுகளுக்கு அதிபதியாகவும் வருவதால் அமையும் இடம் பொறுத்து நல்ல பலன்களை யும் சமயத்தில் செய்கிறார்.

3ல் மறைந்து சுபத்துவம் பெற்றால் செவ்வாய் காரக யோகம் வழங்குவார் (ரியல் எஸ்டேட்..). எனினும் சொந்த வீடு அமைய தாமதம் ஆகும் இதர சுபர் நிலையை பொறுத்தே கிடைக்கும்



### குரு

இயற்கை சுப கிரகமான குரு பகவான் மகர லக்னத்திற்கு 3 மற்றும் 12க்குடைய அசுப ஆதிபத்ய அதிபதியாக வருகிறார்.

எங்கிருந்து இவர் தசா நடத்தினாலும் மேற்படி இரு ஆதிபத்ய எதிர்மறை பலன்களையும் செய்வார் தான் எனவே இவர் மறைவது நன்று.

9ல் நின்றால் பக்தி உண்டு கோயில் விசயத்தில் ஜாதகர் செலவு செய்வார் தந்தையார் சொத்தினை பெறுவதற்கு மிகவும் மெனக்கெட வேண்டியிருக்கும். நியாயவானாக இருப்பதாக எண்ணி கொண்டு மற்றவர்களிடம் கெட்ட பெயர் வாங்குவார்.

இதுவரையில் மகர லக்னம் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டோம் அடுத்து கும்ப லக்னம் பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.


திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரை சேர்ந்தவர் ஜோதிடர் எல்லி. சட்டம் பயின்ற இவர் ஜோதிடம், தத்துவம், வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். ஜோதிடம் தொடர்பான ஆய்வுகள், கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர். தொடர்புக்கு : 9894176494



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram




## அட்டைப்படத்தில்

அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமண்யர் – கண்ணனூர்.
( முருகனுக்கான முதற் கற்றளிக் கோயில் )
தைப்பூசம் 2025 சந்தனக்காப்பு அலங்காரம்

# உன் வாழ்க்கை உன் கையில்

உன்னை மாற்றிட உன்னால் இயலும்
சாத்தியம் என்றே நெஞ்சமும் கூறும்
உணர்ந்து நடந்திட உண்மைகள் புரியும்
மாற்றங்கள் எளிது அழகுடன் விளங்கும்
உனது வாழ்க்கை உந்தன் கையில்
செழித்திடச் செய்வது செய்திடும் செயலில்
அமைத்துக் கொள்ளுதல் நாளும் பொறுப்பு
இறுதி வரையில் இணைந்திடும் களிப்பு



கவிச்சுடர்
தஞ்சை.பழ.வள்ளியப்பன்
மதுரை

# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

**97917 76534**

www.naamnagarathar.com